AstroVed


# சத்வித்யா

மாலை: 1 மலர்: 25

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

ஆன்மீக விஞ்ஞான இதழ்

இணையதளம் வாயிலாக மாதம் ஒரு முறை வெளிவரும்



## நலங்கள் அருளும் நவக்கிரக குரு பகவான்!

- தீபாவளியும் சுவையான செய்திகளும்
- விஷ நோய்கள் குணமாக...
- ஐஸ்வர்யங்களை அள்ளித்தரும் கோதூளி முகூர்த்தம்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com

AstroVed

# சத்வித்யா



போன ஜென்மத்தில் நாம் என்ன செய்து கொண்டிருந்தோம் என்ன நினைத்துக் கொண்டிருந்தோம் என்பதை அறிவதும் அறிவியல் தான்! நினைவுத் திறன் அதிகமாக பரப்ப பட்டதாக இருந்தால் தான் நமது முற்பிறவி பற்றி அறிய முடியும். புத்தர், கடவுளே இல்லை என்றவர் ஆனால் முற்பிறவி என்பது உண்டு என நம்பினார். ஒரு விளக்கை ஏற்றினால், அதைக்கொண்டு அடுத்தது அதிலிருந்து இன்னொன்று என பல விளக்குகளை தொடர்ச்சியாக ஏற்ற முடியும். இப்படித்தான் கடந்து போன பிறவியின் நினைவுகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆகையால் தான் பல பிரச்சனைகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அடுத்து ஏற்ற முடியாமல் ஒரு விளக்கு அனைவதைப் போல் நமது மூளை முற்பிறவி நினைவுகளை எப்போது மறந்து, புதிய சிந்தனை பிறக்கிறதோ அப்போது தான் நமது பிரச்சனைகள் மறந்து புதிய வாழ்கை, புதிய பாதை பிறக்கும்.

Dr. Baskaran Pillai




அன்பு சத்வித்யா வாசகர்களே! இந்த நவம்பர் மாதம், நாடெங்கிலும் உவகை பொங்கும் தீபாவளித் திருநாள் கொண்டாடப்படும் மாதமாக அமைந்துள்ளது! நரகாசுரனை அழிக்க அவதாரம் செய்த நாராயண மூர்த்தியின் தனிப் பெரும் கருணையால், மனித குலத்தையே துவம்சம் செய்து, உலகையே அச்சுறுத்திய கொரோனா என்னும் கொடுந்தொற்று கட்டுக்குள் வந்துள்ளது என்பதே நமக்கு ஆறுதலான செய்தி தான். கொரோனா காலம் நமக்குக் கற்றுத்தந்த படிப்பினைகள் ஏராளம்! ஏராளம்! அவற்றையெல்லாம் மனதில் கொண்டு, சில கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து கடைப்பிடிப்போம்! நோயற்ற ஆரோக்கிய வாழ்வே அழிவில்லாத செல்வம் என்பதை அனுபவரீதியாக உணர்ந்துள்ள நாம் கடவுளின் கருணையை வேண்டுவோம். நேர்மையை மனதில் ஏந்துவோம்! தர்ம சிந்தனையில் நீந்துவோம்!

எல்லாம் வல்ல பரம்பொருள், இன்பங்களை எல்லார்க்கும் வழங்கட்டும்!

அன்புடன்
(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

## பக்கங்கள்


தீபாவளியும் சுவையான செய்திகளும் --------- 3

நலங்கள் அருளும் நவக்கிரக குரு பகவான் --------- 5

அருமையான மூலிகை அருகம்புல் --------- 8

திருவிளக்கு பற்றிய சில குறிப்புகள் --------- 9

சதாசிவ பிரம்மேந்திரர் --------- 10

துளசியின் பெருமை -------- 13

அருள் மழை பொழியும் அழகு முருகன் ---------14

ஐஸ்வர்யங்களை அள்ளித்தரும் கோதூளி முகூர்த்தம் ---------16

இளையான்குடி மாற நாயனார் --------17

தீபாவளியும் லட்சுமி பூஜையும் ---------20

மந்திர மகிமை விஷ நோய்கள் குணமாக ---------21

துடைப்பத்தின் மகிமை ---------22

இறைவன் இருக்கின்றான் ---------23

கந்த சஷ்டி சிறப்புகள்... ---------26

பாக்கியங்களை அள்ளித்தரும் ஸ்ரீ பகமாலினி யந்திரம் ---------28

கடலூர் பாடலீஸ்வரர் கோயிலில் அருந்தவ நாயகியின் உயர் தவம்..

தீபாவளி சிறப்பு தரிசனம் ---------29

அரிய ஆன்மீகத் தகவல் ---------31

அருள் மழை பொழியும் ஆனந்த தீபாவளி ---------32

ஆன்மீக கௌ்விகளும் அர்த்தமுள்ள பதில்களும் ---------34

தீபாவளி அன்று பெருமாள் செய்த காரியம்! ---------36

குரு பெயர்ச்சி பலன்கள் 2021 - 2022 ---------41



# தீபாவளியும் சுவையான செய்திகளும்!

~ ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

ஆண்டுதோறும் வரும் தீபாவளிப் பண்டிகை என்றால் சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவருக்குமே அது மகிழ்ச்சியைத் தரும் ஒன்றே!

ஐப்பசி மாத சதுர்தசி திதியில் வரும் தீபாவளி குறித்து அநேக சுவையான செய்திகள் உண்டு. ஐப்பசித் திங்களானது சித்திரையை முதலாவதாகக் கொண்ட ஏழாவது வரிசையில் இடம் பெற்றுள்ளது.

வேதாந்த அர்த்தத்தில் ஐப்பசி என்பது ஏழாவது ஞான பூமி என்ற துரீயம் ஆகும். சதுர்தசி என்பது பதினான்காவது திதியாகிறது. வேதாந்தத்தில், ஞான யாத்திரை மேற்கொள்ளும் ஜீவன் தன்னுடைய ஆன்மீக வாழ்க்கையில் ஒரு குருவின் அடிபணிந்து சிரவணம், மனனம் என இப்படி ஒவ்வொரு சாதனங்களை செய்து கடைசியாக நிர்விகற்ப சமாதியை அடைகிறான். தீபாவளிக்குக் காரணமான எத்தனையோ ஆன்மிக சாதனைகளில் ஈடுபட்டு இருந்தும், தன்னுடைய அகங்கார உணர்வைப் போக்கிக் கொள்ளாத வாழ்க்கையில் ஈடுபட்டான். நான் என்ற உணர்வு அவனை அப்படிப் பின்னிப் படிந்திருந்ததே அதன் காரணம். அச்சமயத்தில் தான் பகவான் கண்ணனின் தேவியான சத்யபாமா என்கிற குரு நிர்விகற்ப சமாதியெனும் ஆயுதத்தை அந்த நரகாசுரனின் மீது எறிந்து அந்த ஜீவனை மோட்சம் என்கிற உன்னத நிலையைப் பெறச் செய்தாள்.

இக்காரியத்தை பகவானே நடத்தி அந்த அசுரனை வதம் செய்திருக்கலாமே என்ற கேள்வி எழும். கிருஷ்ணர் ஒரு ஜீவன் முக்தர். அக்கடவுளுக்கு ஞானி, அஞ்ஞானி என்ற பேதமே கிடையாது. அவருக்கு தனக்கு அந்நியமாக இன்னொருவரே இல்லை! எனவே தன்னிலிருந்து, அதாவது பகவானிலிருந்து தனக்கு வேறல்லாத சத்தியபாமாவைக் கொண்டு, அந்த ஞானக் கருணை மூலம் நரகாசுர ஞான வதத்தை நிகழ்த்திக் காட்டியுள்ளார் என்பதே தத்துவமாக விளங்குகிறது எனக் கூறுவார்கள்.

இப்படி ஆன்றோர்கள் பார்வையில் தீபாவளி திகழ்கிறது! தீபாவளியையே தீபங்கள் ஏற்றிக் கொண்டாடி மகிழ்கின்றோம்.

புராணங்களில் கூறப்பட்டுள்ளபடி, ஐப்பசி மாத அமாவாசை தினத்தன்று தான் தேவர்களும், அசுரர்களும் ஒன்றுகூடி மந்தார மலையை மத்தாகவும், வாசுகிப் பாம்பை நாணாகவும் சுற்றி வைத்து பாற்கடலைக் கடைந்தபோது வெளிப்பட்ட பலவைகளில் மகாலட்சுமியும், அமிர்தமும் அடங்கும். அந்த தேவியை தேவர்களும், மகரிஷிகளும் வரிசையாக பல தீபங்கள் ஏற்றி ஆரவாரத்துடன் வரவேற்று ஆனந்தித்தனர். சமஸ்கிருதத்தில் 'ஆவளி' என்பது வரிசையைக் குறிக்கும் சொல் ஆகும். தீபம் + ஆவளி என்பது மக்கள் வழக்கில் தீபாவளியானது.

தீபாவளிக்கு வெவ்வேறு பெயர்கள் உள்ளன. காமசூத்திரத்தில் தீபாவளியை 'கூராத்திரி' என்றும், பவிஷ்யோத்ர புராணத்தில் 'தீபாவளிகா' எனவும், கால வேகம் மற்றும் இராஜமார்த்தாண்டம் நூற்களில் 'சுக்ராத்திரி' எனவும்

கூறப்பட்டுள்ளது. சில சமஸ்கிருத நூற்களில் 'வாசக்திரிய கவுமுதி' மற்றும் 'த்ருத்யத்வம்' என்றும் குறிப்பிடப்பட, நாக நத்தம் என்ற நூலில் தீப ப்ரதியனு ஸ்தவம் என அது காணப்படும். 'தீபோத்ஸவம்' என தீபாவளியை விளம்பும் நூலாக 'நீலமேகப் புராணம்' திகழ்கிறது.
கௌடில்யரின் அர்த்த சாஸ்திர நூல் எழுதப்பட்ட காலம் கி.மு. 4ம் நூற்றாண்டைச் சார்ந்தது. அதில் ஐப்பசி மாத தீபாவளியில் குடி ஜனங்கள் ஆலயங்கள் மற்றும் நதிக்கரைகளுக்குத் திரளாகச் சென்று வரிசையாக விளக்குகள் ஏற்றி வழிபடுவர் என உரைக்கப்பட்டுள்ளது.

தீபாவளி புண்ணிய தினத்திற்கு முதல் நாள் மாலைப் பொழுதில், யமதர்மனின் தங்கையான யமுனாதேவி அவரைக் காணச் செல்லும் போது மிகுந்த மகிழ்ச்சியோடு காணப்படுவாராம்! அதனால் அந்த கால தேவனை துதித்து 'யமதீபம்' ஏற்றப்படுகிறது என்பது ஐதீகம்.
தீபாவளி என்றாலே உடனே நம் நினைவுக்கு வரும் முக்கிய பொருட்களாக இருப்பவை எண்ணெய் குளியல், புத்தாடை, இனிப்பு பண்டம், பட்டாசு போன்றவைகள் அல்லவா!
தீபாவளியன்று நாம் பயன்படுத்தும் அத்தனைப் பொருள்களிலும் இவர்கள் அல்லது இவை நெருங்கிய சம்பந்தம் உடையதாக அமைந்துள்ளது.

ஸ்நானம் புரியப் பயன்படுத்தும் நல்லெண்ணெயில் லட்சுமி தேவியும், சீயக்காயில் சரஸ்வதியும், சந்தனத்தில் பூமாதேவியும், குங்குமத்தில் கௌரி தேவியும், குளிக்கும் நீரில் கங்காதேவியும், அணியும் புத்தாடையில் மகாவிஷ்ணுவும், இனிப்பு மருந்தில் தன்வந்திரியும், எரியும் தீபத்தில் பரமாத்மாவும், பட்டாசு நெருப்புப் பொறியில் ஜீவாத்மாவும், பூஜிக்கும் மலர்களில் மோகினியும், உண்ணும் இனிப்புப் பண்டங்களில் அமிர்தமும் மிக்க தொடர்புள்ளவையாக அமைந்துள்ளன என பண்டைய நூலொன்றின் மூலம் அறியப்படுகிறது. எனவே அனைத்துமே காரியத்தோடு தான் தீபாவளி நாளில் உபயோகப்படுத்தப்படுகின்றன தொன்று தொட்டே. தீபாவளி எண்ணெய் குளியலுடன் இணையும் சம்பவமாக இது அமைந்துள்ளது.

முன்பே குறிப்பிட்டபடி, தேவர்கள், அசுரர்கள் மந்தார மலையை மத்தாக்கி, வாசுகிப் பாம்பைக் கயிறாக்கி கடைகையில், அம்மலை அசையாதிருக்க, மகாவிஷ்ணு கூர்மாவதாரம் பூண்டு தன் திரண் தோள்களால் தாங்கி நின்றார். அப்பொழுது வெளிப்பட்ட மகாலட்சுமி, மகாவிஷ்ணுவைத் தேடி, ஆழ்கடலுக்குள் புகுந்துவிட, தேவியை சோதிக்கும் விதமாக பெருமாள் 'தீன தீபம்' என்ற எள் செடிகள் நிறைந்த வனப்பகுதியில், அவள் கண்ணில் படாமல் ஒடிக்கொண்டே இருந்தார். அதனைக் கண்டு கொண்ட தேவியும் பெருமாள் விரைந்து செல்லும் எள் செடி குவியலில் மனோ வேகத்துடன் தொடர்ந்து அலைகையில், அவளுடைய பாதங்கள் பட்டு எள் செடியிலிருந்து எண்ணெய் வெளிப்பட்டுக் கசியலாயிற்று. ஒரு வழியாக அதே இடத்தில் மகாவிஷ்ணுவின் திருக்கரங்களை, தேவி பிடித்து விட, அந்த ஓட்டப்பந்தயம் அவளுக்கு வெற்றியைத் தந்து விட்டது. மகாலட்சுமி கொண்ட பக்தியின் உறுதி, பெருமாளை அசைத்து விட, உடனே தேவியை மணந்து கொண்டார் மகாவிஷ்ணு.

அச்சமயம் எள் செடிகள் திரண்டு மகாலட்சுமியிடம் வேண்டிக் கொண்டபடித்தான் 'நல்லெண்ணெயில் வாசம் செய்வேன்' என்ற வரம் ஈந்தாள் தேவி. அன்று மகாவிஷ்ணு - மகாலட்சுமி திருமணம் நிகழ்ந்த புண்ணிய தினமே தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது என்று ஒரு புராண நூலில் கூறப்பட, நாம் லட்சுமியின் பேரருள் பெறவே தீபாவளி எண்ணெய் குளியல் மேற்கொள்கிறோம்.
பொதுவாக மக்கள் வழக்கில், ஒருவரையொருவர் தீபாவளி தினத்தில் சந்தித்து வாழ்த்து தெரிவிக்கையில் "என்ன கங்கா ஸ்நானம் ஆயிற்றா?" எனக் கேட்கும் மரபு உண்டு. அதன் பின்னணி இதுவே.

தீபாவளியன்று கங்கையில் நீராடி பகவானை வழிபட்டால் புண்ணியம் கிடைக்கும் என்பது நியதி.

இது, அனைத்து ஜனங்களாலும் நிறைவேற்ற இயலாத ஒன்றென்பதால் பகவானே, கங்கையிடம், "தீபாவளி நாளில் அதிகாலையில் எவர் எந்த நீரில் ஸ்நானம் புரிந்தாலும் நீ அங்கு தங்கி அருள் புரிய வேண்டும்" என்று ஆக்ஞையிட கங்கை அதனை சிரமேற்கொண்டாள்.

இன்றைய காலகட்டத்தில், தொடர்ந்து உலகம் முழுவதும் பரவி, வெவ்வேறு பெயர்கள் தாங்கி உலவி, மக்களுக்கு நோய் தாக்கும்

நிலை ஒழிந்து, அவர்கள் பூரண ஆரோக்கியம் கொண்டு சகல வளமுடன் வாழ வேண்டும் என்ற பொது பிரார்த்தனையை முன்வைத்து தீபாவளித் திருநாளை முறைப்படி கொண்டாடி மகிழ்வோம்!

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய
சுடர் ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர்ஆழி நீங்குகவே என்று

(பொய்கையாழ்வார் - திவ்யப் பிரபந்தப் பாடலில்)

# நலங்கள் அருளும் நவக்கிரக குரு பகவான்!

~ கீதா மணி

குரு பகவான் யார்?
நவக்கிரகங்களில் குரு கிரகம் ஒரு சுப கிரகமாகிறது. வியாழன், குரு, பிரகஸ்பதி என்றும் அழைக்கப்படும் இவர் படைப்புக் கடவுள் பிரம்மதேவனின் மானச புத்திரரான மகான் ஆங்கீரஸ முனிவருக்கும், சிரத்தா என்ற தேவிக்கும் பிறந்தவர்களில் ஏழாவது பிள்ளையாவார். கிரகத்திலும் ஆண் கிரகமாகிறார். கோள்களில் உள்ள நான்கு வகைகளில் குரு தாராக் கிரகங்களில் ஒருவராவார்.

பிரகஸ்பதியான குரு கொண்ட பல பெயர்களில் தனகாரகன், புத்திரகாரகன், லோகபூஜ்யர், வாகீசர், பீதாம்பரம், பொன்னன் போன்றவைகளும் அடக்கம். அனைத்துக் கிரகங்களிலும் அளவற்ற ஒளி வீசிப் பிரகாசிக்கும் தன்மை கொண்ட குரு பகவான் தான் கொண்ட சுப பார்வையால், ஒரு ஜாதகன் கொண்ட அனைத்து தோஷங்களையும் போக்கும் வல்லமை கொண்டவர் எனக் கணிக்கப்பட்டவர்.

குரு, பிரம்ம ஞானம் அடைந்த ஞானிகளையும், பக்தர்களையும், திறன் கொண்ட மேதைகளையும், சேமிக்கும் பழக்கம் கொண்டவர்களையும் குறிப்பவர். ஏன், முக்கரணங்களின் தூய்மைக்கும் அவரே காரணகர்த்தாவும் ஆவார்! அந்தணர்கள், பசுக்கள் இவர்களுக்கு ஆதி மூலவரான குரு, ஒருவரை மாபெரும் சாதனைகளைப் புரிய வைத்து எவருக்குமே தலைவணங்காத தலைமைப் பதவியும் அளித்து அவரை மனித குல மாணிக்கமாகத் திகழ வைத்து விடும் அருளாளர்.

நல்ல நண்பர்களை அளிக்கும் குரு, சிம்மக் குரலையும் ஜாதகருக்குத் தந்து, வித்தைகள் பலவற்றையும் அளித்து தேர்ச்சி பெற வைப்பார். இனிப்புப் பிரியரான பிரகஸ்பதி, சாத்வீக குணமும் உற்சாக முகமும், மஞ்சள் நிறமும் கொண்டிருக்கிறார்.
பஞ்சபூதங்களில் ஆகாயமாக உள்ள குரு, செல்வ வளங் கொண்ட வட கிழக்கு திசையில் ஆட்சிமைப்பட்டவர்.

தனது தகப்பனார் ஆங்கிரஸ முனிவரிடம் சீடராகி, அனைத்துக் கலைகளையும் கற்றுத்

தேர்ந்த குரு, தேவலோகத்தில் இந்திரனின் அவையில் தேவர்களின் குருவாகப் போற்றப்படுகிறார். தாரா, சங்கினி என்ற இரு மனைவியாரும் கசன், எமகண்டன் என்ற இரண்டு பிள்ளைகளும் இவருக்கு உண்டு. ஜெபமாலை, கமண்டலம், யோக தண்டம் அபயக்கரம் என தனது நாற் கரங்களில் பூண்டு இவர் ஆலயங்களில் இடம் பெற்று அருள்பாலிப்பார்.

குருவின் பலன் ஜாதகனுக்கு அவர் அளிப்பது 16 ஆண்டுகள். ஒரு குறிப்பிட்ட ராசியிலிருந்து அவர் அடுத்த ராசிக்குள் பிரவேசிக்க ஒரு வருடமாகும். குரு தான் இருக்கும் இடத்திலிருந்து 5- 7- 9 இடங்களைப் பார்க்கும் சக்தியில் ஜாதகர் எண்ணிக்கை இல்லாத நற்பலன்களை அடைவார்கள். அதே பிரகஸ்பதியானவர் ஜாதகரின் கோசாரத்தில் 5-6-9-12 இடங்களுக்கு வந்துவிட்டால் அவர், கொண்ட மனக்கவலை, துயரம், செல்வநிலை குறைதல், நோய் பாதிப்பு எனும் கெடும் பலன்களுக்கு உட்படவேண்டியவர் ஆக நேரிடலாம்.
குரு பகவான் நல்ல இடத்தில் அமைகையில் அந்த ஜாதகர் எதிர்பாராத தன வரவு, புனித யாத்திரை, வாகன வசதி, பதவி யோகம் போன்றவற்றை பெறும் பாக்கியசாலி ஆகிவிடலாம்.

“குரு பார்க்க கோடி நன்மை” என்பது தொன்மைக் காலத்திலிருந்து தொடர்ந்து வரும் நல் வாக்காகும். அதை உண்மையாக்கும் ஒரு புராண சம்பவத்தை இங்கே கோடிட்டுக் காட்டலாம்.

எந்த கர்வம் வந்தாலும் கல்வியில் தேர்ந்த கர்வம் எவருக்கும் வரக்கூடாது என்று பெரியவர்கள் கூறுவார்கள். ஆனால் இந்த கர்வம் வந்து பங்கமான தெய்வங்கள், தேவதைகள், மகரிஷிகள், கிரகங்கள், மனிதர்கள் என ஒரு பட்டியலே உண்டு. நவக்கிரகங்களில் ஒருவரானவர் சந்திரன் இவர் அனைத்து கலைகளையும் பாடமாக அறிந்தது குருபகவான் இடம்தான். ஒரு சமயம், தான் அனைத்திலும் மேலானவன் என்ற உணர்ச்சியை சந்திரன் பெற்று, புளகாங்கிதத்தில் திளைத்திருந்தார் இந்த உணர்வு தனது சீடனுக்கு உகந்தது அல்ல என்று குருவுக்குத் தோன்றியதால் சந்திரனைக் கூப்பிட்டு “நீ, இப்பொழுதுதான் பூலோகத்தில் ஜனனமான அந்தக் குழந்தைக்கு ஜாதகத்தைக் கணித்துக் கொண்டுவா!” எனக் கூறி, அக்குழந்தையின் இருப்பிடத்தையும் சுட்டிக்காட்டிக் கூறினார்.

“இவ்வளவு தானே, குருவே, இதோ சில வினாடிகளில் கணித்து தங்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்” என வணங்கி விடைபெற்றார், சந்திரன்.

சொன்னபடியே, குழந்தையின் ஜாதகத்தைக் கணித்து சந்திரன் மீண்டும் குருவிடம் வந்து அதனைக் காட்டினார்.

அந்த ஜாதகக் கணிப்பை குரு பார்வை இடுகையில் சந்திரன் ஆர்வமுடன், “குருவே! பிறந்த இக் குழந்தையின் ஆயுசு ஒரு வருட காலம் மட்டுமே! அந்த அல்ப ஆயுசு கொண்ட ஜீவன், அடுத்த வருடமே இதேநாளில் நல்ல பாம்பு கடித்து மாண்டு விடும்” எனக் கூறினார். அப்போது குரு “நீ தவறாமல் அடுத்த ஆண்டு என்னை இதே நாளில் சந்திக்க வேண்டும்” என ஆக்ஞையிட, சந்திரன் வணங்கி விட்டு விடை பெற்றார்.

ஓராண்டு கழித்து குரு சொன்ன அதே நாளில் சந்திரன் குருவை சந்தித்தார். அன்று, சென்ற வருடம் குரு சுட்டிக்காட்டிய, சந்திரனால் ஜாதகம் கணிக்கப்பட்ட குழந்தை புத்தாடை பூண்டு நகைகள் அணிந்து ஒரு வீட்டின் தொட்டிலில் அமைதியாகப் படுத்திருந்தது.

அப்போது நடக்கவிருக்கும் சம்பவத்தைக் கண்காணிக்கும் வகையில், குருவும், சந்திரனும் பார்த்துக் கொண்டிருந்தனர்.
அந்நேரத்தில் கட்டப்பட்ட அந்த தொட்டிலின் சங்கிலியை சுற்றியவாறே, திடீரென காணப்பட்ட நாகமொன்று குழந்தையை நோக்கி மெல்ல நகர்ந்தது. அதனைக் காட்டி சந்திரன் “குருவே! அங்கே உற்றுப் பாருங்கள்! நான் கணித்துச் சொன்னபடியே, அக்குழந்தை சாகப் போகிறது” என கர்வக்குரலில் சொன்னார். அப்பொழுது குரு “நடக்கப்போவதை அமைதியுடன் பார்”! எனக் கூறினார்.

கிட்டத்தட்ட குழந்தையை பாம்பு நெருங்கிவிட்டது அதனைத் தீண்டுவதற்காக! ஆனால் யாரும் எதிர்பாராத, ஏன் சந்திரன் கூட திகைக்கும் வகையில், குழந்தை பாம்பை, விளையாட்டு பொம்மை என நினைத்து கைப்பற்ற மிக வேகமாக உற்சாகத்தில் தனது கைகளையும், கால்களையும் ஆட்டியது. அந்த வேகத்தில் பாம்பு,

சங்கிலி வளையத்தில் நன்றாகச் சிக்கி அவஸ்தைப்பட்டது. சில நிமிடங்களில் வளையத்தின் அழுத்தத்தால் பாம்பு துடிதுடித்து இறந்து விட்டது. இதனால் பதறிப்போன சந்திரன் "தான் குழந்தைக்கு சரியாகத்தானே ஜாதகம் கணித்தோம்? சாக வேண்டிய சிசு குரு பார்வை பட்டிருந்தால் தானே பிழைக்க முடியும். ஆனால் ஜாதகம் கணிக்கும் போது அதற்குக் குருபார்வை கிஞ்சித்தும் கிடையாதே? எப்படி இந்த தவறு நிகழ்ந்தது?" எனக் குழம்பியபடியே, குருவிடம் இதற்கான விளக்கத்தைக் கேட்டார்.

குரு புன்னகைத்தபடி "சிஷ்யா! குழந்தை ஜனிக்கையில் குரு பார்வை இல்லா விட்டால் என்ன? இத்தனை நேரம் நான்தான் வைத்த விழியை அந்தக் குழந்தையை விட்டு மாற்றாமல் இருந்தேனே. அது புரியவில்லையா அப்பனே?" என பதிலளித்தார்.

தன்னை குருபகவானுக்கு இணையாக எண்ணி, தான் பெற்ற கர்வ உணர்ச்சியை அறவே போக்கிக் கொண்ட சந்திரன், "மகா குருவே! என் தவறுக்கு மன்னிப்பு வழங்குங்கள்" என பணிவுடன் கூறி நமஸ்கரித்தார். குருவும் நல்லாசிகள் தந்து, வாழ்த்தி, சந்திரனை அனுப்பி வைத்தார்.

நிகழும் பிலவ ஆண்டு, ஐப்பசி மாத சனிக்கிழமை கூடிய (ஆங்கிலதேதி 13.11.21) 27ம் தேதி குரு பகவான் மகர ராசியிலிருந்து கும்ப ராசிக்குள் பிரவேசமாகிறார்.

குரு தோஷம் போக்கும் சில பரிகாரத் தலங்களில் சிறப்பான ஒன்றாகிறது கும்பகோணத்தை அடுத்த ஆலங்குடித் தலம். இங்குள்ள சிவாலயத்தில் குரு பகவான் தனிச் சந்நிதி கொண்டு குடிகொண்டுள்ளார்.



குருபகவானின் திருவருள் பெற இந்த குரு காயத்ரீ ஜபத்தை உச்சரித்து கோடி தரும் நற்பலன்களை அடைவோம்!

"வ்ருஷபத் வஜாய வித்ம ஹே
க்ருணி
ஹஸ்தாய தீ மஹி!
தந்நோ குரு ப்ரசோதயாத்!!"



# அருமையான மூலிகை அருகம்புல்

~ கும்பகோணம் நாராயணி

பெரும்பாலும் எல்லாருடைய வீட்டின் தோட்டம், அல்லது கொல்லைப்புறம், மற்றும் வீட்டைச் சுற்றியும் அங்கங்கே விளைந்து காணப்படும், அறுகம்புல்லின் நோய் நிவாரண சக்தி, இன்னும் பல பேர்களை எட்டாதது துரதிஷ்டவசமானது.

பிள்ளையார் பூஜைக்கு மட்டுமே அந்த அரிய புல் வகை அதிகம் நம்மால் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதே உண்மை நிலை!

நமது உடலில் மறைந்துள்ள நச்சுத்தன்மையைப் போக்கி இரத்தத்தை சுத்தப்படுத்தும் அறுகம்புல் சாறு, இன்னும் எத்தனையோ வகையில், பல கட்டுப்படுத்த முடியாத நோய் பாதிப்புகளைக் குறைக்கவோ அல்லது அறவே நீக்கவோ எப்படிப் பயன்படுகிறது என்பதைப் பார்க்க வியப்பு ஏற்படும்!
சிறு குழந்தைகளுக்கு, அடிக்கடி ஜலதோஷ பாதிப்பு ஏற்படுவது சகஜம்.
அவைகளுக்குப் பாலுடன் கொஞ்சம் அறுகம்புல் சாறு கலந்து புகட்டி விட்டால், கொஞ்ச நேரத்தில் சளிக்கட்டு விலகுவதோடு, மீண்டும் அதன் தாக்கம் வராத எதிர்ப்பு சக்தியையும் தந்துவிடும்.

இன்றைய காலகட்டத்தில், பல காரணங்களால் பெண்கள் தாய்ப்பால் சரிவர கொடுக்க இயலாத நிலை உள்ளது. அறுகம்புல் சாற்றை அருந்திவர தாய்ப்பால் சுரக்கும் என்பது பாட்டிகளின் கை வைத்திய முறையாகும்

இரத்தப்புற்று, அனிமியா, இதயக்கோளாறு, தூக்கமின்மை முதலிய பிணிகளையும் தணிக்க வல்ல அறுகம்புல் சாறு, பல் ஈறுகளில் ரத்தம் வடிதல், வாய் துர்நாற்றம் போக்கி, பற்களில் சொத்தை வராமலும் காக்கும் என்பது அனுபவ பூர்வ வைத்திய சிகிச்சையாகும்.

உயிராற்றலை வளர்க்கும் சக்தி கொண்ட பச்சையம் என்பது அறுகம்புல்லின் ஒரு பகுதியாக உள்ளதால், அது இரத்த சிவப்பு அணுக்களை வேகமாகக் கூட்டியும், சுத்தமானதாக இருக்கவும் வைப்பதோடு, இரத்த விருத்திக்கும் காரணி ஆகிவிடுகிறது.

மலட்டுத்தன்மை கொண்ட ஆண்களுக்கு, இப் புல்லின் சாறு, தாது விருத்தியை உண்டாக்கி, நல்ல ஆண்மையைத் தரவல்லது என வைத்திய நூற்களில் சொல்லப்பட்டுள்ளது.
அதுமட்டுமல்ல.....

உடல் தளர்ச்சி, நரம்புத்தளர்ச்சி இவற்றை அகற்றுவதோடு மட்டுமின்றி, அறுகம்புல்லை அரைத்து ரத்தம் வடியும் காயங்களின் மீது வைத்துக் கட்டி விட, ரத்தப் போக்கு நின்று விடுவதோடு காயமும் விரைவில்

ஆறிவிடும் எனவும் அறியப்பட்டுள்ளது.

இந்த அறுகம்புல்லின் மருத்துவ குணம் தெரிந்தே, பாதை ஓரக் கடை, பிளாட் பாரங்களில், அறுகம்புல்லை சாறு செய்து விற்பனை செய்கிறார்கள். இனிப்பு சுவையோடு குளிர்ச்சித் தன்மையும் கொண்டது அது.

தூய்மை செய்த அறுகம்புல்லை எடுத்து, அதில் இருந்து சாறு எடுத்து, கொஞ்சம் சுத்தமான தேன் விட்டு பானகமாகப் பருக, அது உடல் வெப்பத்தைக் குறைத்து விடும்.

கைப்பிடி அளவு அறுகம்புல்லை அரைத்து, பசையாக்கி அதனை பசுந் தயிரில் கலக்கிக் குடித்தால், வெள்ளைப்படுதல் மற்றும் மூல நோய் இருந்தால், அதனைப் படிப்படியாகக் கட்டுப்படுத்தி விடும்.

அனைத்து தர்மங்களுக்கும் வேர் தான் நம் பழமையான வேதங்கள். அதிலே தாவரங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், அவை ஓஷதிகள், வனஸ்பதி என்ற இருவகைப்பட்டவை என உரைக்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# திருவிளக்கு
## பற்றிய சில குறிப்புகள்

~ கீதா மணி

தீபாவளி, கார்த்திகை மற்றும் சில பண்டிகைகள் மற்றும் தினசரி நடைமுறையில் முக்கியத்துவம் பெறும் தீபம் என்கிற விளக்கு குறித்தான சில சிறப்புச் செய்திகள். தீப வழிபாடு செய்யும் பொழுது, ஒன்றை விளக்கு இன்றி, கூட உப தீபமாக சிறிய அகல் விளக்காவது ஏற்றி வைத்தல் நல்லது. பூஜை அறையில் குத்து விளக்கின் பிற பகுதிகள் தவிர்த்து தீபமேற்றினால், அது கிழக்கு முகசுடர்விடும் படி ஏற்றுதலே சிறப்பு.

குலதெய்வ வழிபாட்டின் போது, வேப்பெண்ணெய், இலுப்பை எண்ணெய், பசு நெய் மூன்றையும் கலந்து விளக்கேற்றல் விசேடம் தரும்.

விளக்கை வெறும் தரையில் வைத்து ஏற்றாமல், சிறிய தட்டில் கொஞ்சம் அரிசியை தூவிவிட்டு அதன்மேல் அதனை வைத்துவிட்டு ஏற்றுவது நன்மை பயக்கும்.

ஏற்றப்பட்ட விளக்கினை அணைக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் வாயால் ஊதி அணைப்பது தவறானது.

அதன் திரியை மெதுவாக உள்ளே இழுத்து விட்டோ, அல்லது பூவால் சுடரை ஒற்றியோ சுடரை அகற்றுவதே முறை.
கீழ்க்கண்ட முறையில் தீபமேற்றுவதே சரியான முறை:

பிள்ளையார், மகாலட்சுமி - பசு நெய் விட்டு ஏற்றிய தீபம்
ஈஸ்வரன் - இலுப்பை எண்ணெய் தீபம்
மகாவிஷ்ணு - நல்லெண்ணெய் தீபம்

மாலை வேளைகளில் பூஜை அறையில் விளக்கேற்றி விட்டு, திருமகள் துதிகளை உச்சரித்து வழிபட, குடும்ப வறுமை, துன்பமகன்று சகல வளங்களும் பெற வழி பிறக்கும்.

திருமணத்தடை ஏற்படும் கன்னிகையர்கள் அதனைப் போக்கிக் கொள்ளவும், சுமங்கலிப் பெண்கள் மகப்பேறு இன்றி இருந்தால், அப்பேற்றைப் பெறவும், செந்நிறத் துணியால் திரியாக்கி தீபமேற்றலாம். முறையான தீபவழிபாடு, நம் வாழ்வில் வளம் சேர்க்கும் சிறந்த ஏற்பாடே!



# சதாசிவ பிரம்மேந்திரர்

~ ரா.பன்னீர் செல்வம்

முகாலய மன்னரின் அந்தப்புரம்! மன்னர் அந்த நேரத்தில் அங்கு தான் இருந்தார். அவரது ராணிகள் நீராடிக்கொண்டிருந்தனர். அப்போது....

சுற்றி இருப்பது, நடப்பது எதுவுமே அறியாதவராக ஒரு மகான் அந்த வழியே நடந்து வந்து கொண்டிருந்தார்! அதனால் என்ன? என நினைக்கின்றீர்களா?... அந்த மகான் முற்றும் துறந்தவராக, நிர்வாணக் கோலத்தில் வந்து கொண்டிருந்தார். ஆம்! ஆண்டவன் நினைவினையே மனதில் தாங்கி நடப்பவருக்கு, அது அந்தப்புரம் என்றோ, அங்கே ராணிகள் குளிப்பதோ, அரசன் அங்கிருப்பதோ.... எதுவுமே நினைவில் தங்கவில்லை.... அவர் பாட்டுக்கு சென்று கொண்டிருந்தார்.

அவர் எதையும் கவனிக்காமல், இறை நினைப்போடு சென்றாலும், தொலைவிலிருந்தே அவரது நிர்வாணக் கோலத்தையும், எதையும் லட்சியம் செய்யாமல் அவர் நடந்து செல்வதையும் பார்த்த மன்னன் சினங்கொண்டான். நீராடிக் கொண்டிருந்த ராணிகள் அவசர அவசரமாய் தங்கள் ஆடைகளை எடுத்து உடலில் போர்த்திக் கொண்டனர். அச்சமும், அசூயையும் அவர்களை ஆட்கொண்டது. அரசனின் அணை மீறிச் சென்றது. “ஆணவம் கொண்ட இந்த அயோக்கியன் யார்?”



என வெகுண்டு, வேகமாக அவரை நோக்கிச் சென்ற மன்னன், கடுங்கோபத்தோடு, தன் உடைவாளால் அந்த மகானுடைய வலது கரத்தை வெட்டினான். அடுத்த நொடி, துண்டான அந்த வலது கரம் கீழே விழுந்தது!

இதைப் பார்த்த ராணிகள் பதட்டமும், ஓரளவு நிம்மதியும் அடைந்தனர். ஆனால், அடுத்த கணமே அரசன் உட்பட அனைவருமே திகைப்புற்றனர்! ஆம்... நம் உடலில் ஒரு முள்ளால் ஏற்படும் சிறு சிராய்ப்பு கூட நம்மை ஒரு நொடி வேதனைப்படுத்தும் அல்லவா? ஆனால், அந்த மகானோ, தன் உடலில் ஓர் அங்கம் வெட்டப்பட்டு தரையில் வீழ்ந்த போதும் சிறிதளவும் வேதனையின்றி, ஒன்றுமே நடவாதது போல் முகத்தில் இருந்த புன்னகை மாறாமல் தொடர்ந்து நடந்தார்.

துண்டான கரத்தை கவனிக்கவில்லை; உடலில் வழியும் உதிரத்தை சட்டை செய்யவில்லை! உடையில்லா திருமேனி, உதிரத்தோடு நடைபோட்டது!

அங்கே திகைப்பில் சூழ்ந்த மன்னனுக்கும் சரி, சற்று தொலைவில் அச்சத்துடன் நின்றிருந்த ராணிகளுக்கும் சரி.... இவர் ஒரு மகானாகத் தான் இருக்க வேண்டும் என்ற எண்ணம் ஒரே நேரத்தில் உண்டானது.
ராணிகள், தங்கள் மன்னனிடம், “அவர் ஒரு மகானைப் போல் தெரிகிறது. உடனே அவரிடம் சென்று மன்னிப்புக் கேளுங்கள்,” என ஒருசேரச் சொன்னார்கள்.

கீழே கிடந்த வலக்கரத்தை எடுத்துக் கொண்டு, மகானின் எதிரே ஓடி நின்றார், மன்னர்! “சுவாமி, என்னை மன்னித் தருளுங்கள்,” என வேண்டினார்!
அப்போது தான் சுயநினைவு வரப்பெற்ற அந்த மகான், என்ன என்பது போல் பார்த்தார்! மன்னர் சற்றும் தாமதிக்காமல் அந்த அவ யோகியின்

பாதங்களில் வீழ்ந்து எழுந்து, “சுவாமி, தங்களின் வலக்கரத்தை வெட்டிய பாவி நான்; இந்த செய்கை வாழ்நாள் முழுவதும் என்னை வேதனைப் படுத்தும் இதற்கு சரியான பரிகாரம் தந்தருள வேண்டும்” என கண்கள் பனிக்க வேண்டினார்.

“என்ன.... என் கரம் துண்டிக்கப்பட்டுவிட்டதா?.. அது உனக்கு வேதனையைத் தருமா?... சரி, அதை இருந்த இடத்திலேயே வைத்து விடு!” என புன்னகை மாறாமல் சொன்னார், மகான்!



ஒன்றும் புரியாமல் தவிப்போடு, அந்த வலது கரத்தை பழையபடி தோளில் பொருத்தினார் மன்னர்! உடனே மகான், தன் இடது கையால் வலது தோளினை தடவிக் கொடுக்க, வெட்டுப்பட்ட சுவடே தெரியாமல் ஒட்டிக் கொண்டது, அவரது வலக்கரம்!

“இப்போது உன் வேதனை தீர்ந்ததா?...” என்றபடி சிரித்தவாறே, மன்னரை ஆசீர்வதித்து விட்டு தொடர்ந்து நடந்தார், அந்த இறை வடிவ மகான்!

இத்தனை சக்தி வாய்ந்த அந்த மகான் யார்?....

அவர் தான், மகான் சதாசிவ பிரம்மேந்திரர்! சோமநாத யோகி.... பார்வதி அம்மாள் தம்பதியருக்கு அன்பு மகனாக அவதரித்தவர்! சதாசிவர் இவரது காலம் 17ஆம் நூற்றாண்டு!

இராமேஸ்வரத்தில் அருள் புரியும் ராமநாத சுவாமியின் அருளால் பிறந்த தங்கள் குழந்தைக்கு ராமன் என பெயரிட்டனர், பெற்றோர்!

இளவயதிலேயே இறையருள் பெற்ற இந்தக் குழந்தை, வயது வளர வளர, தந்தையின் வழிகாட்டுதலால் வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், நன்னெறி வளர்க்கும் சாத்திரங்கள், உபநிடதங்கள் அனைத்தும் பிழையறக் கற்றுத் தேர்ந்தார்! அனைத்திலும் சிறப்பு மிக்க புலமை பெற்றவராய் வளர்ந்து வரும் வேளையில், இவரது வயது வாலிபத்தை அடைவதற்கு முன், இவரது தந்தையான சோமநாத யோகி, இல்லறம் துறந்து, துறவு பூண்டு இமயம் நோக்கி சென்றுவிட....

அதுமுதல் அன்னை பார்வதியம்மாளின் அன்பு அரவணைப்பில் வளர்ந்தார் சிவராமன்! இந்த இளைய மகானின் அறிவாற்றலையும் ஞானத்தையும் உணர்ந்த தாயார், சிவராமனை அப்போதைய காஞ்சி மடத்தின் 57 ஆவது பீடாதிபதியான சதா சிவேந்திர சரஸ்வதி சுவாமிகளிடம் சேர்த்துவிட்டார்! அங்கு சென்ற பின் சிவராமனது அறிவும், புலமையும் மேலும் பிரகாசமாய் சுடர் விட்டது!

அங்கிருந்து பற்பல திசைகளுக்கும் பயணித்த சிவராமன், தன்னுடைய பழுத்த புலமையால் ஏகப்பட்ட சிறந்த வித்வான்களை தனது வாக்கு சாதுர்யத்தால் தர்க்கம் செய்து வெற்றி பெற்றார்!

இப்படி வெற்றி மேல் வெற்றி பெற்ற சிவராமனை அழைத்த சதாசிவவேந்திர சரஸ்வதி சுவாமிகள், அவருக்கு சில உபதேசங்கள் செய்தார்! “என்ன தான் அறிவாற்றல் பெற்றிருந்தாலும், தொடர் வெற்றிகளால் மனதில் ஆணவம் குடி கொண்டு விடும்! அது உனது ஆன்ம முன்னேற்றத்திற்குத் தடைகளை உண்டாக்கி விடும்! நிதானமாக நட”, என அறிவுறுத்தினார்.

ஆனாலும், காஞ்சியில் இருந்த பல வித்வான்களிடமும் அவர் தர்க்க வாதம்புரிந்து

வந்தார்! சுவாமிகள் அவரை அழைத்து, "பலருடைய வாயை அடக்கக் கற்ற நீ.... உன் வாயை அடக்காமல் இருக்கிறாயே", என சற்றே வருத்தத்துடன் சொல்ல, அன்றிலிருந்து தர்க்கம் செய்வதை விட்டு விட்டார், சிவராமன்!

தன் சீடரான சிவராமனுக்கு சுவாமிகள், சதாசிவ பிரம்மேந்திரர் என்னும் பெயரைச் சூட்டி சந்நியாச தீட்சையும் வழங்கினார்!
அன்றுமுதல் ஓர் அவதூதராக ஒப்பற்ற மகானாக வலம் வந்தார், சதாசிவ பிரம்மேந்திரர்!
சிவஞான சிந்தனையில் மூழ்கிய சதாசிவர், சிவன் பற்றிய பல நூல்களை எழுதினார்.
ஒரு சமயம்....
காவிரிக்கரையில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களை அழைத்த சதாசிவர், மணலில் பள்ளம் தோண்டச் சொன்னார். அந்தப் பள்ளத்தில் இறங்கி, மண்ணைக் கொட்டி மூடச் சொன்னார். அதன்பின் நான்கு மாதங்கள் கழித்து, ஊர்காரர்கள் தோண்டிப் பார்க்க... உள்ளே... நிஷ்டையில் இருந்த சதாசிவர், நிஷ்டை கலைந்து எழுந்து, சிரித்தபடியே சென்றுவிட்டார்!
தஞ்சையை அடுத்துள்ள புன்னைநல்லூர் மாரியம்மன் கோவிலைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். இந்த ஆலயத்தில் உள்ள அம்மனின் திருமேனி புற்று மணலால் ஆனது! எனவே அதற்கு அபிஷேகம் செய்வது கிடையாது! புனுகு மட்டுமே சாத்துவார்கள்.

இது எப்படி அமைந்ததென்றால்...
தஞ்சை மன்னரின் நோயினைத் தீர்ப்பதற்காக, நம் சதாசிவ பிரம்மேந்திரர் அமைத்த திருமேனியே அந்த மாரியம்மனின் திருமேனி! இது தவிர...
புதுக்கோட்டை மன்னரின் வேண்டுகோளின் படி, சிறிது மணலை எடுத்து மந்திரித்துக் கொடுத்தார், சதாசிவர்! அந்த மணலை இன்றளவும் தங்கப் பேழையில், வைத்து பூஜை செய்து வருகின்றனர், மன்னர் பரம்பரையைச் சேர்ந்தோர்!

இத்தகைய சித்து வேலைகளை சிவனின் அருளால் செய்து, தன்னிகரற்ற சித்தராய் - மகானாய் இப்பூவுலகில் நிலைபெற்ற சதாசிவ பிரம்மேந்திரர் கரூரை அடுத்த நெரூரில், தன் சீடர்களிடம் சொல்லி, குழி வெட்டச் சொல்லி, சித்திரை மாத தசமி நன்னாளில் அந்தக் குழியில் இறங்கி ஜீவ சமாதி அடைந்தார்.
அவர் ஜீவ சமாதி அடைவதற்கு முன்னால், அங்கிருந்தவர்களிடம், "நாளை காசியிலிருந்து ஒருவர் சிவலிங்கம் ஒன்றைக் கொண்டு வருவார்! அதை என் சமாதி மீது பிரதிஷ்டை செய்து, அருகில் ஒரு வில்வ மரக்கன்றை நட்டு விடுங்கள்." என்று சொன்னார்.

அவர் சொன்னபடியே, மறுநாள் ஒரு யோகி சிவலிங்கம் கொண்டு வர, அதை ஜீவ சமாதி மீது பிரதிஷ்டை செய்து மரக்கன்றை நட்டனர்! எங்கோ பிறந்து, இணையில்லா சித்துக்கள் செய்த சதாசிவ பிரம்மேந்திரர் நெரூரில் ஜீவ சமாதி அடைந்தது, இப்பகுதி மக்கள் பெற்ற பெரும்பேறு!
இவர் நெரூரில் சித்தியடைந்தது, 1753 ம் ஆண்டு! மேலும் இவர் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்தவர் என்று அறியப்படுகிறது.

இவருடைய ஜீவ சமாதி நெரூரில் மட்டுமல்லாது புதுக்கோட்டை, மானாமதுரை போன்ற இடங்களிலும் அமைந்துள்ளது! சித்தர்கள் எனப்படுவோர், பல இடங்களில் ஜீவசமாதி அடைவார்கள் என்பது இயல்பு! அதன்படியே, தமிழகத்தில் மூன்று இடங்களில் சதாசிவ பிரம்மேந்திரரின் ஜீவசமாதி அமைந்துள்ளதாக அறியப்படுகிறது.

எப்படியாயினும், இந்த மகானின் அருட்சக்தி, ஜீவசமாதிகளில் மட்டுமின்றி, அவரை நினைக்குந்தோறும் அவரது அருள் வந்து நம்மை அரசாளும் என்பதே உண்மை!

சதாசிவ பிரம்மேந்திரரை தியானித்து அருள் பெறுவோம்.

# துளசியின் பெருமை

~ ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

எக்காலத்திலுமே தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் விரோத உணர்வு அதிகம். தேவர்களெல்லாம் நல்லவர்களாக இருக்க, அசுரர்கள் அவர்களுக்கு நேர் எதிரிடை! வழக்கமாக அசுரர்கள் தாங்கள் மகாவிஷ்ணுவிடமிருந்தோ, பரமசிவனிடமிருந்தோ இல்லை ஏதாவது இதர தெய்வங்களிடமிருந்தோ தவம் புரிந்து அரிய வரங்களைப் பெறுவதும், அவற்றைக் கொண்டு தேவர்களையோ, மா முனிவர்களையோ, பொது ஜனங்களையோ, ஏன் தனக்கு வரம் கொடுத்தவர்களைக் கூட துன்புறுத்துவதில் ஆனந்தம் பெறுபவர்கள். மோசமான உச்சகட்ட நிலை வரும்போது இறைவன் தோன்றி பக்தர்களைக் காப்பதும், அசுரரை அழிப்பதும் சகஜமான சம்பவங்களாக இருந்தன, அக்காலத்தில்.

ஆனால் தேவர்களையும், அசுரர்களையும் ஒன்றுபடுத்திய ஒரு சம்பவமாக அமைந்தது, பாற்கடலிலிருந்து அம்ருதம் கடைதல்!

கிடைத்ததற்கு அரிய, சாகாவரம் அளிக்கும் அம்ருதத்தைப் பெறும் ஒரே நோக்கமுடன் தேவர்களும், அசுரர்களும் பாற் கடலில் மந்தார மலையை மையத்தில் வைத்து, வாசுகிப் பாம்பை அதில் சுற்றிவிட்டு இரு பக்கங்களில் எதிர் எதிராக நின்று, இரு அணியினரும் ஒற்றுமை பாங்குடன் அதனைக் கடைந்தனர்.

அப்பொழுது பலத்த முயற்சிக்குப் பிறகு, திருப்பாற்கடலிருந்து ஆலகால விஷம் தோன்றியது. அதனை உணர்வுடன் சிவபிரான் உண்டு தேவர்களைக் காத்த 'நீலகண்டன்' ஆனார்.

அதற்குப் பிறகு பாற்கடலிலிருந்து வெளிப்பட்ட பல அரிய பொருள்களில் கல்பக விருட்சம், காமதேனு, ஐராவதம் எனும் யானை, உச்சைஸ்ரவஸ் என்ற குதிரை, கௌஸ்துபம் எனும் மணி, மகாலட்சுமி, சந்திரன், கடைசியாக இரு அணியினரும் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்த அம்ருதமும் கிடைத்தது.



அதன் பிறகு அம்ருதத்திலிருந்து பச்சை நிறத்துடன் விளங்கும் துளசி தோற்றமானாள். பாற்கடலில் கிட்டிய பல பொருட்களை அனைவருக்கும் பிரித்துத் தந்த திருமால், தான் விரும்பிய துளசி, கௌஸ்துபம், மகாலட்சுமி ஆகிய மூன்றை மட்டும் எடுத்துக் கொண்டார்.

தனக்கு வந்த மகாலட்சுமியையும், கௌஸ்துப மணியையும், தனது அழகு மார்பில் இடம்பெறச் செய்து விட்டு, திருமால் பிரியமுடன் துளசியை பாதம் முதல் சிரசு வரை அணிந்துகொண்டார்

அந்தத் துளசியை மகாவிஷ்ணு தன் மார்பில் சூடிய திருநாளே, அவர் துளசி தேவியை திருமணம் செய்த நன்னாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.
துளசி, பெருமாளைக் கல்யாணம் செய்த புண்ணிய நாளாக பிலவ ஆண்டு ஐப்பசி மாதம் 30ந் தேதி கூடிய வளர் துவாதசி திதியில், ஆங்கிலதேதி 16. 11.2021 ல் வர, அதனை விசேடமாக பக்தர்கள் கொண்டாடிக் களிப்புறுவார்கள்.

இத்தினத்தில் சுமங்கலிப் பெண்கள், அவரவர் தங்கள் வீட்டிலுள்ள

துளசிச் செடியை சந்தனம், மஞ்சள் இட்டு பூஜை செய்து, கீழ்க்கண்ட சுலோகம் சொல்லி பிரார்த்தனை செய்யலாம்.

“ஸௌ மாங்கல்யம் தனை ஸ்வர்யம்
புத்திர பௌத்ராதி ஸம்பதம்
துளஸ்யம் ருத ஸம்பூதே ஹி மே பக்த
வத்ஸலே”

என.

இவ்வாறு துளசி விவாக தினத்தைக் கொண்டாடுவோர்க்கு, நீண்ட ஆயுள் கிட்டுவதோடு, அவரவர் இல்லங்கள் செழுமையுடன் செல்வம் பெறுவர். தவிர தம்பதிகளுக்குள் ஒற்றுமை நிறைவதோடு, மகிழ்ச்சியும் கிடைக்கும் என புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

ஒரு சமயம் கிருஷ்ணரின் தேவிமார்களான சத்ய பாமாவும், ருக்மணியும் ஒரு போட்டி நடத்தினார்கள். முதலில் சத்தியபாமா தராசின் ஒரு தட்டில் பொன்னையும், பல ஆபரணங்களையும் கொட்டி எதிர்த் தட்டில் கிருஷ்ணரை அமர்த்தி, சரிக்கு சமமாக வைக்க முயன்றாள் ஆனால் அது முடியாமல் தோல்வியுற்றாள்.

ஆனால் ருக்மணியோ கிருஷ்ணர் அமர்ந்த தராசின் எதிர்த் தட்டில், கிருஷ்ணரின் நாமத்தை ஒரு துளசி தளத்தில் எழுதி வைத்துவிட, தராசு அதிசயப் படும் விதத்தில் கிருஷ்ணரின் எடைக்குச் சமமாக நின்று விட்டது!

வைணவத் திருத்தலங்களில் பிரதான பிரசாதமாக விளங்கும் துளசி, பித்ரு காரியங்கள், தான நிகழ்ச்சி, விரதம், தேவ பூஜை, தேவதா பிரதிஷ்டை போன்ற சமயங்களில் பயன்படுத்தப்படுகிறது.

துளசி இடப்பட்ட நீர் கொண்டு நீராடினால் அது புண்ணிய நதிகளில் ஸ்நானம் புரிந்த பலனைத் தந்து விடும்.

ஒருவரின் அந்திம காலத்தில் சொட்டு துளசி கலந்த நீரை உண்பவர், தனது பிறவி நீங்கப் பெறுவதோடு, அவர் வைகுண்ட பதவியும் பெறுவார் என்பது இந்துமத நம்பிக்கையாகும்.

# அருள் மழை பொழியும் அழகு முருகன்

~ கீதா மணி

“ஏறு மயிலேறி விளையாடு முகமொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசு முகமொன்றே
கூறு மடியார்கள் வினை தீர்த்த முகமொன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீ யருள வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமானே”

இப்படி மகான் அருணகிரிநாதரால் போற்றப்பட்ட அழகு முருகனுக்குத்தான், இப்படி எத்தனைப் பெயர்கள், எத்தனை வடிவங்கள்! பட்டியல் போட்டால் அதற்கு ஒரு முடிவே வராது! எனவே இந்த 16 வடிவங்களுடன் அவரை தரிசிப்போம்!

## ஷண்முகன்

ஆறு அழகு முகங் கொண்டவன் ஆதலால் ‘ஷண்முகன்’ ஆனார். முருகன் இத்திருநாமம் பூண்டு பன்னிரு கரத்தோடும், இரு தேவியரோடும் அருட் காட்சி தருவார், மயில் வாகனத்தில் கம்பீரமாக வீற்றிருந்து!

## தாராகாரி

சூரபத்மனின் இளவலான தாரகாசுரனை வதைத்த திருக்கோலனான கந்தன், ஆறுமுகமும், பன்னிரண்டு கரங்களும் கொண்டு நின்ற நிலையில் தரிசனம் தருவார்.

## சேனானி

வழக்கமான ஆறுமுகமும், பன்னிரண்டு கைகளும் கொண்ட கந்தவேள், ஸ்ரீ தட்சிணாமூர்த்தி போல் அமர்ந்த அழகிய கோலத்தில் தோற்றமளிப்பார். இரு கரங்கள் அபய வரதம் காட்ட, பிற கரங்கள் பல ஆயுதங்கள் ஏந்தியிருக்கும்.

## பிரம்ம சாஸ்தா

‘ஓம்’ எனும் பிரணவ மந்திரத்திற்கு அர்த்தம் சொல்ல இயலாமல் விழித்த பிரம்மனை சிறையிட்டு விட்டு, படைப்புத் தொழிலுக்கு ஊறு வரக்கூடாது என, தானே அதனை ஏற்ற ஆறுமுகம் காட்சி அளிப்பார், சிருஷ்டிக்கு அவசியமான சக்தியுடன், அமர்ந்த திருக்கோலத்தில்.

## வள்ளி கல்யாண சுந்தரன்

குறமகள் வள்ளியின் கரம் பற்றி அக மகிழ்வுடன் குமரன் தரும் கல்யாணக் கோல அற்புதக் காட்சி!



### பால சுவாமி

தனது வலது கரத்தில் தாமரை மலர் ஏந்தியிருக்க, இடது கரம் கத்ய வலம்பித முத்திரையை வெளிப்படுத்த, சின்னஞ்சிறு பாலனாக சிங்காரவேலனின் சிந்தை கவர் வடிவமே இது.

### கிரௌஞ்ச பேதன்

கொடிய அசுரர்களைக் காக்க, அவர்களுடைய கோட்டைக்கு அரணாக நின்று தடுத்த கிரௌஞ்சம் எனும் மலையைத் தகர்த்ததால் கிரௌஞ்ச பேதன் எனும் பெயர் பெற்ற சுப்ரமண்யர், ஆறுமுகமும், எட்டுக் கரங்களும் பூண்டு அளிக்கும் எழில் வடிவமாகும்.

### சிகி வாகனன்

ஓம்கார ரூபனான சிவ மைந்தன், ஒரு முகமும், நாற்கரமும் உள்ளவனாக, நாத வடிவு மயில் மீது வீற்றிருக்கும் அற்புதத் திருக்கோலம்! சிகி என்பது மயிலைக் குறிப்பது.

### சக்திதரன்

ஒரு முகமும், இரு கரமும் உடைய அழகனாக, நின்ற கோலத் திருக்காட்சியில், இச்சா, கிரியா ஞான சக்திகளை ஒன்றாகக் கொண்ட சக்தி ஆயுதமுடன் காணப்படுவார் இவர்.

### ஸ்கந்தன்

இடுப்பில் கோவணம் பூண்டும், கையில் தண்டம் ஏந்தியும், உடலில் ருத்ராட்சங்கள் தரித்த குழந்தை வடிவ ஆண்டி முருகனின் நின்ற அழகுத் திருக்கோலமானவர்.

### தேவசேனாபதி

வானுலகத் தேவர்களின் படைத் தலைவனான கடம்பன், ஆறுமுகமும், பன்னிரண்டு கரமும் உடையவனாக, தன் மடி மீது அமர்ந்திருக்கும் தேவி தெய்வயானையை அணைத்தபடி, அமைந்த அருட் தோற்றம் அளிப்பது.

### சுப்ரமண்யன்

ஒரு முகத்தோடும், நான்கு கரமுடனும், நின்ற திருக்கோலக் காட்சி அளிக்கும் கந்தன். இக்காட்சியின் போது அபயவரத முத்திரை, சக்தி ஆயுதம் மற்றும் ஏந்தி இருக்கும் கோழிக் கொடியும் இணைந்து பரவசமளிக்கும்.

### கஜ வாகனன்

பிணிமுகம் இயலும் யானை வாகனத்தில் அமர்ந்து, ஒரு முகத்துடன் நான்கு கரமும் காட்டி, உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அழகுடன் காட்சி தரும் வள்ளிமணாளன்.

### சரவணபவன்

ஆறு வடிவங்களாக, சரவணப் பொய்கையில் அவதரித்து, சக்தியின் அரவணைப்பால் ஒரு முகமும், பன்னிரு கரமும் உடையவனாகி உருமாறிய சரவணன்!

### குமாரன்

நின்ற திருக்கோலமும், வலப்புறம் சக்தியும் உடனிருக்க, கத்தி, வஜ்ரம், கோழிக் கொடி, கேடயமுடனும் நாற் கரங்களுடன் விளங்கி, தன் பக்தர்களைக் காக்கும் குமரேசன்.

### கார்த்திகேயன்

கார்த்திகைப் பெண்களால் போற்றி வளர்க்கப்பட்டதால் கஜ முகனின் இந்த இளவல், காரணப் பெயரால் கார்த்திகேயன் ஆகியிருக்க, ஆறுமுகமும் கரங்களில் ஆயுதங்கள் ஏந்தியும், அபய வரத ஹஸ்தம் காட்டி நின்றநிலை அற்புதக் காட்சியும் வழங்குவார்.

முருகனுக்குரிய கந்த சஷ்டி விரதம் பூண்டு, அவருடைய பேரருளைப் பெறுவோம்!

# ஐஸ்வர்யங்களை அள்ளித்தரும் கோதூளி முகூர்த்தம்

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

இந்து சமயத்தில் பசு மிகவும் புனிதமான விலங்காக வணங்கப்படுகிறது. கன்றுடன் சேர்ந்த பசு கோமாதா அல்லது காமதேனு என்று அழைக்கப்படுகிறது. காதேனுவின் உடல், அனைத்து தெய்வங்கள், ரிஷிகள் மற்றும் முனிவர்கள் வாசம் செய்யும் புனிதமான இடமாகப் பார்க்கப்படுகிறது. கோதூளி முகூர்த்தத்திற்கும் பசுவிற்கும் என்ன சம்மந்தம் என்றால், கோதூளியில் உள்ள “கோ” என்பதற்குப் பசு என்று பொருளாகும். “தூளி” என்றால் தூசி என்று பொருள்படும். அதிகாலை சூரிய உதயத்திற்கு சற்று முன்பு, பசுக்களை கொட்டிலில் இருந்து மேய்ச்சலுக்குக் கூட்டிச் செல்வார்கள். அதே போல, சூரிய அஸ்தமனத்திற்கு சற்று முன்பாக பசுக்களை, கொட்டிலுக்குக் கூட்டி வருவார்கள். இந்த நேரமானது அதிகாலை 5:45 மணி முதல் 6:15 வரையிலும். மாலை 5:45 முதல் 6:15 வரையிலும் அமைகிறது. இந்த இரண்டு நேரங்களுக்கும் நாள், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் போன்ற பஞ்சாங்க தோஷங்கள் இல்லை.

அதிலும் பசுக்களை கொட்டிலுக்குக் கூட்டிவரும் மாலை வேலையில், உணவை உண்ட திருப்தியில் பசுக்கள் கொட்டிலுக்கு வரும். அவ்வாறு வரும் பொழுது பசுவின் குளம்படி மண் தரையில் பட்டு புழுதி காற்றில் பறக்கும். அந்தப் புழுதி நமது உடம்பில் படும் போதோ அதை நாம் சுவாசிக்கும் போதோ, தெய்வ அருள் நம்மை வந்து அடைகிறது. சூரிய அஸ்தமனத்தின் போது வரும் கோதூளி முகூர்த்தம் என்பது சுக்கிரனுக்குடையதாக கருதப்படுகிறது. அன்னை மஹாலட்சுமியை சுக்கிரன் குறிக்கிறார். எனவே கோதூளி முகூர்த்த நேரத்தில் அனைத்து விதமான சுப காரியங்களையும் செய்யலாம். தினமும் கோதூளி முகூர்த்த நேரத்தில் வீட்டை சுத்தம் செய்து குளித்துவிட்டு, கோ பூஜை அல்லது காமதேனுவிற்கு சந்தன குங்குமத் திலகமிட்டு, வெண்தாமரை மலரைக் கொண்டு பூஜித்து, தீப தூப ஆராதனை காட்டி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் காமதேனு காயத்ரி மந்திரத்தை 108 முறை சொல்லி வழிபட்டு வந்தால், தன நிலை உயரும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும் அதுமட்டும் அல்லாமல், இது சகல ஐஸ்வர்யங்களையும் கொடுக்கும்.

காமதேனு காயத்ரி மந்திரம்:
ஓம் சுபகாயை வித்மஹே
காமதாத்ரியை சதீமஹி



# இளையான்குடி மாற நாயனார்

~ ரா.பன்னீர் செல்வம்

இளையான்குடி மாறன், சிறந்த சிவபக்தர்! சிவனடியார் எவரையாவது காண நேர்ந்தால், அந்த சிவனே தன்னெதிரே வந்ததாய் எண்ணி வணங்குவார்; வாஞ்சையுடன் உபசரிப்பார்! சிவனடியார்க்குத் தொண்டு செய்வதை அந்த சிவனுக்கே செய்யும் தொண்டாய் எண்ணி, இன்றுவரை வாழ்ந்து வருபவர்! அந்த ஓலைக்குடிசையில் தன் மனைவியோடு ஊர்மெச்ச வாழ்ந்து வரும் மாறனுக்குப், பெரிதாக சொத்து ஏதும் இல்லை. அவரது வீட்டின் பின்புறம் உள்ள சிறிதளவு நிலம்! அதில் விளையும் தானியத்தைக் கொண்டு, தங்கள் இருவரின் பசிப்பிணியை போக்கிக் கொள்வதோடு, மீதமுள்ளதைக் கொண்டு சிவனடியார்கள் அகங்குளிரச் செய்வதே ஆனந்தம் என்ற கொள்கையைக் கொண்டிருந்தார்.

“தனக்கு மிஞ்சித்தான் தானம்” என்ற முதுமொழி இவரிடம் தோற்றுப் போகும்; காரணம், சிவனடியார்களுக்குப் போக மிஞ்சியுள்ளதே தமக்கு என்னும் சிந்தனை கொண்டிருந்தார். இவரது மனையாளும், கணவரின் சிவத் தொண்டில் முழுமனதோடு தன்னை இணைத்துக் கொண்டு இறைத் தொண்டில் ஈடுபட்டார்!

தற்போது இவர்கள் வாழ்வில் ஓர் வாட்டம்! இடையில் சில காலம் மழை பெய்யாமல் பொய்த்துப் போனதால், வறுமை இந்தக் குடும்பத்தை வாட்டி வதைத்தது!

வீட்டிற்கு வெளியில் இருந்த சிறு தோட்டத்தில், அவரை, புடலை, கத்தரிக்காய் என விளைவித்து, அவற்றைக் கொண்டு பண்டமாற்று முறையில் சிறுதானியம் வாங்கி, தங்கள் பசியைப் போக்கிக் கொண்டனர். பண்டமாற்று முறையில் பெற்ற தானியத்தில் அடியார்களுக்கு அமுது படைத்து, அவர் தம் பசியாற்றி, அதிலே இன்பம் கண்டனர்.

இதோ.... இரவு நேரம்! அந்த ஓட்டைக் குடிசையில் கணவன், மனைவி இருவரும் வயிறு நிறைய பசியோடும், நெஞ்சம் நிறைய கவலைகளோடும் உறக்கம் வராமல் பலத்த சிந்தனையோடு புரண்டு கொண்டிருந்தனர்!

இதற்குக் காரணம் தான் என்ன?....

சில நாட்களுக்கு முன்பு தான் மழை பெய்தது! சற்று தெம்போடு, தாங்கள் சேமித்து வைத்திருந்த விதை நெல்லை எப்படியேனும் விளைய வைத்து விட வேண்டும் என ஏர் உழுது, நாற்றங்காலைப் பக்குவப்படுத்தி வைத்த மாறனார், இன்று காலை தான் நாற்றங்காலில் விதை நெல்லைத் தூவியிருந்தார்.

ஆனால், மாலை மங்கிய வேளையில் வானம் கருக்க ஆரம்பித்தது! மேகங்கள் சூழ்ந்து, உலகமே இருண்டு விட்டதைப் போல அடர்ந்த இருட்டு!

தற்போது, தூறல் ஆரம்பித்துவிட்டது! இனி, எந்த நேரமும் பெருமழை, பேய் மழையாய் உருவெடுத்து விடும் போல் இருந்தது!

படுக்கையில், தூக்கம் வராமல் தவித்த மாறனாரின் உள்ளமோ, “இறைவா! எங்கள் பசி போக்கும் ஆதாரமாக இருந்தது இந்த விதை நெல் தான்! எங்கள் பசி என்பதை விட, வருகின்ற சிவனடியார் மனம் கோணாமல், அவர்களை உபசரிக்க, உணவு கொடுக்க ஆதாரமாய் இருந்த விதை நெல்லை நாற்றங்காலில் விதைத்து விட்டேன்; ஆனால், வானின் நிலை என்னை வாட்டுகின்றதே..... பெருமழை பெய்தால், வெள்ளம் திரண்டு, நான் விதைத்த நெல்லெல்லாம் வாய்க்கால் வழியாக வெள்ளத்தில் ஓடோடி விடுமே! அப்படி ஏதும் நிகழ்ந்து விட்டால், பசியில் எங்கள் ஜீவன் போனால் பரவாயில்லை; சிவனடியார் யாராவது வந்தால், அவர்தம் பசி போக்க முடியாத பாவமல்லவா எங்களைச் சேரும்?! பரமனே காப்பாற்று!”

“ஓரிரு நாட்கள், பெருமழை இல்லாதிருந்தால் நன்றாய் இருக்கும், என



வேண்டினார்!"

மாறனாரின் வேண்டுதல் அந்த மகேஸ்வரன் காதுகளில் கேட்டதாகத் தெரியவில்லை: தூறிய வானம், சற்றே வேகமெடுத்து, பெரு மழையின் ஆரம்பத்திற்கு அடையாளம் காட்டியது!

மாறனாரைப் போலவே உறக்கம் வராமல் தவித்த அவரது மனைவி, "நீங்கள் தாமதிக்காமல் வயலுக்குச் சென்று, வெள்ளத்தில் நெல்மணிகள் வெளியேறாதவாறு மடைகளை அடைத்து விட்டு வாருங்களேன்," என தனக்குத் தோன்றிய யோசனையைத் தெரிவித்தாள்.

சற்றும் யோசிக்காமல், உள்ளே கிடந்த ஓர் ஓலையை எடுத்து, தன் தலைக்கு மேல் பிடித்தபடி வீட்டின் பின்புறம் இருந்த வயலுக்குச் சென்றார்,

கும்மிருட்டில் ஒன்றுமே தெரியவில்லை. இடையிடையே வெட்டித் தெறித்த மின்னலின் வெளிச்சத்தில், தடுமாறியபடி கால்வாய் மடைகளை பலப்படுத்தினார்!

இருப்பினும் அவருக்கு ஐயம்! இன்னும் சற்று நேரத்தில் மழை வலுக்கக்கூடும்! அப்படி நடந்தால்..... இந்த மடைகள் காணாமல் போகுமே! "இறைவா..... எல்லாம் உன் செயல்!" என்றபடி வீடு திரும்பினார்!

எழுந்து உட்கார்ந்து கொண்டு, தவிப்போடு காத்திருந்த மாறனாரின் மனைவி, "மடைகளை நன்கு பலப்படுத்தி விட்டீர்களா?.." எனக் கேட்டாள்! "சரியாகத்தான் இருக்கிறது; ஆனாலும், மழை வலுத்தால்...?..." என நாதழுதழுக்கக் கூறினார்!

"வலுத்தால் வலுக்கட்டுமே! என்ன ஆகப்போகிறது?... நம் கையில் ஏதுமில்லை! எல்லாம் அவன் செயல் என்றான பின்னாலே, நாம் செய்வதற்கு ஒன்றுமில்லை. என்ன நடக்க வேண்டுமென இறைவன் நினைக்கிறாரோ அதுதானே நடக்கும்! விடுங்கள்!" எனக் கவலையோடு படுத்தாள்!

அவளைப் பார்த்தபடியே, சூழலின் வேகத்தைக் காதில் வாங்கியபடி தானும் தரையில் சாய்ந்தார் மாறனார்!

அப்போது.....

"பிக்க்ஷாந்தேகி..... திருச்சிற்றம்பலம்".... என்னும் குரல், குடிசைக்கு வெளியே கேட்க, இருவருமே பரபரப்போடு எழுந்து, ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்! வேகமாக வந்து கதவைத் திறந்த மாறனார், வெளியில் மழையில் நனைந்தபடி சிவனடியார் ஒருவர் நனைந்த காவி உடையோடு குளிரில் நடுங்கியபடி நின்றிருந்தார்.

சிவனடியாரை அப்படி ஒரு கோலத்தில் பார்த்து பதட்டமடைந்த மாறனார், “சுவாமி... உள்ளே வாருங்கள்,” என விலகி வழிவிட, சிவனடியார் உள்ளே நுழைந்தார்!

ஒரு மனைப்பலகையை அவருக்கு ஆசனமாகப் போட்டு, “அமருங்கள் சுவாமி,” என்றாள் மாறனின் மனைவி.

முகத்தில் வழிந்து கொண்டிருந்த மழை நீரை துடைத்தபடி, புன்சிரிப்போடு அமர்ந்த அடியாரை, கணவன் மனைவி இருவரும் வணங்கினர்!

“நான், காளையார்கோவிலில் தரிசனம் செய்துவிட்டு புறப்பட்டேன். வழியிலே மழை! பல இடங்களில் ஒதுங்கி நின்றும் மழை விட்டபாடில்லை! இதோ.... உங்கள் இல்லத்திற்கு வந்து விட்டேன், ” என சிவனடியார் கூறியதும்.

“நல்லது சுவாமி.... சற்று பொறுத்துக் கொள்ளுங்கள்; தாங்கள் பசியாற ஏற்பாடு செய்கிறோம்,” என்ற மாறனார், தன் மனைவியை ஓரத்தில் அழைத்துச் சென்று, “இறைவன் இப்படி நம்மைச் சோதிக்கிறானே;! என்ன செய்வது!?.. சிவனடியாரை பட்டினி போட்ட பாவம் நம்மை சேர்ந்து விடுமோ என அஞ்சுகிறேன்”, என கவலையுடன் சொல்ல.....

“அந்தக் கருணாமூர்த்தி நம்மை கைவிடமாட்டார்; இன்னும் மழை வலுக்கவில்லை, சற்று நேரத்தில் வருகிறேன்,” என்றபடி, ஓலையை தலையில் வைத்தபடி வெளியே சென்றாள், மாறனின் மனைவி!

சிவனடியார் கண்களை மூடியபடி, அந்த நிலையிலும் தியானம் செய்தார். அவ்வப்போது, ஓரக்கண்ணால் மாறனாரைப் பார்த்தார்.

இளையான்குடி மாறனாரோ, மனைவியின் திட்டம் என்னவென்று புரியாமல் தவிப்புடன் காத்துக் கொண்டே, மனைவியின் வரவை எதிர்பார்த்திருந்தார்.

தன் புடவைத் தலைப்பில் கொஞ்சம் நெல்மணியோடு உள்ளே நுழைந்தவள், நெல்லை உரலில் கொட்டி, குத்த ஆரம்பித்தாள்..... “இது எப்படி? ஏதிந்த நெல்?....” என ரகசியக் குரலில் கேட்டார் மாறனார்!

“நாற்றங்கால் நெல்லை வெள்ளம் கொண்டாடுவதை விட, நற்றதவத்தவர் பசி போக்க உதவட்டுமே என்று நீங்கள்தூவிய விதை நெல்லை சேகரித்துக்கொண்டு வந்து விட்டேன்!” என புன்னகைத்தாள்!

நெல் குத்தி, அரிசியாகி விட்டது! அடுப்பெரிக்க விறகுக்கு என்ன செய்வது?... அண்ணாந்து பார்த்தார், மாறனார்! கூரையைத் தாங்கியிருந்த குச்சிகளில் சிலவற்றை ஒடித்தெடுத்தார்!

கூரை விறகு அடுப்பில் எரிந்தது; விதைக்கான நெல் உலையில் வெந்தது! மாறனாரின் மனைவி, “அடுத்து குழம்பு வைக்க வேண்டுமே”, என யோசித்து வெளியே ஓடினாள்! அவரைப் பந்தலில் இருந்து சில அவரைக்காய்கள், சிறிய கத்திரிகாய்கள் என மழைநீர் சொட்டச் சொட்ட கொண்டு வந்தாள்!

அடுத்த சில கணங்களில் குழம்பு தயாரானது!

சிவனடியார் தம்முள்ளேயே சிரித்து வியந்தபடி, உணவருந்தத் தயாரானார்!

“குளிரில் உறைந்து கிடக்கும் அடியேனுக்கு சூடான விருந்து! நல்லது, நல்லது! எம்பெருமான் உங்களைக் காப்பாற்றுவான்! பனி மலையில் இருந்து உலகாளும் ஈசன், இந்த சூடான உணவு தேடி, உங்கள் குடிசையை அலங்கரிக்கட்டும்! ” என சிரிக்க....

என்ன ஆச்சர்யம்?! சிவனடியார் வேடம் புனைந்து வந்தது, சாட்சாத் அந்த சிவபெருமானே? எங்கள் உள்ளத்திருந்த இறைவன், இல்லத்தில் எழுந்தருளியிருந்த கோலம் கண்டு ஆனந்த அதிர்ச்சியில் ஒரு கணம் உறைந்திருந்த இளையான்குடி நாயனாரும் அவருடைய மனைவியும் பக்திப் பெருக்கில் கண்ணீர் மல்க, ஈசனின் பாதங்களில் வீழ்ந்தனர்.

அவர்களைத் தேற்றிய இறைவனார் ஈசன், “உங்கள் பெருந்தொண்டால் உள்ளம் களித்தோம்! நலமுடன் வாழ்க”, என அருளினார்! இவர்தான் இளையான்குடி மாறனாராக - 63 வரில் ஒருவராகப் போற்றி வணங்கப்படுகிறார்!

# தீபாவளியும் லட்சுமி பூஜையும்

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் ஆ. விஜய பிரபு



குபேர சக்கரம்

| | | |
|---|---|---|
| 27 | 20 | 25 |
| 22 | 24 | 26 |
| 23 | 28 | 21 |

தீபாவளி அன்று லட்சுமி பூஜை செய்வதால் செல்வச் செழிப்பும், சேமிப்பும் உயரும். பூஜை துவங்க வேண்டிய நேரம்- தீபாவளி அன்று மாலை 5:45 மணிக்கு லட்சுமி மற்றும் குபேரர் படம் வைத்து வழிபட வேண்டும். படத்தின் முன்பு சிவப்பு நிறப் பெட்டி வைக்க வேண்டும். மல்லிகை மற்றும் வெண் தாமரை மலர்களைப், பூஜைக்கு வைத்து வழிபட வேண்டும்.

இங்கு கொடுத்துள்ள சக்கரத்தை, மரப்பலகையில் அரிசி மாவில் வரைந்து கொள்ளவும் (அ) செம்புத் தகட்டில் வரைந்து கொள்ளவும். அதன்மீது புதிய ரூபாய் நோட்டுக்கள், நாணயங்கள் மற்றும் செந்நாயுருவி மூலிகை வைத்து வழிபட வேண்டும். நைவேத்தியமாக தயிர் வைக்க வேண்டும். தூபம் போடும் போது, சாம்பிராணியுடன் லவங்கப் பொடியும் சேர்த்து தூபம் போட வேண்டும். பூஜை செய்யும் போது லட்சுமியின் மந்திரங்கள் ஒலிக்க வேண்டும்.

இத்துடன் சேர்த்து வெற்றிலை, பாக்கு, பழம் மற்றும் இதர பொருட்கள் வைத்து வணங்க வேண்டும். பூஜை முடிந்த பின்பு ஒரு கால்நடைக்கு, பறவைக்கு, நீர்வாழ் உயிரினத்திற்கு உணவு வழங்க வேண்டும். இவ்வாறு செய்தால் மிகுந்த நற்பலன்களை அடைவீர்கள்.

## மந்திர மகிமை

# விஷ நோய்கள் குணமாக...

~ ரா.பன்னீர் செல்வம்

இன்றைக்கு நாட்டையே உலுக்கும் நோய் எந்தெந்த பெயரிலோ மக்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. மலேரியா, ஃபளு, டெங்கு போன்றவற்றையும், இவை தவிர விஷ ஜந்துக்களால் ஏற்படும் விபரீதங்களும் என்றென்றும் மனித உயிர்களுக்கு சவாலாக உள்ளன. இப்படிப்பட்ட, விஷ நோய்கள் குணமாக நமது சௌந்தர்ய லஹரியின் 20 வது பாடல் மந்திரமாக மலர்ந்துள்ளது. அதனைக் காண்போம்.

மந்திரப் பாடல்:

"கிரந்தீ-மங்கேப்ப்ய; கிரண - நிகுரும்பாம்ருதரஸம்
ஹ்ருதி த்வா மாதத்தே ஹிமகா - ரில மூர்த்திமிவ ய:
ஸ ஸர்ப்பாணாம் தர்ப்பம் சமயதி சகுந்தாதி இவ
ஜ்வரப் லூஷ்டான் த்ருஷ்ட்யா ஸீகயதி ஸீ தா தராஸீரவா."

பொருள்:

சந்திரகாந்தச் சிலையைப் போல ஒளிவீசும் உடல் கொண்ட அன்னையே! உன் அங்கங்கள் எல்லாம் அமுத ரசத்தைப் பொழிந்த படி இருக்கின்றன. இப்படிப்பட்ட உன் திருவடிவை எவன் ஒருவன் மனதில் நிறுத்தித் தியானிக்கிறோனோ... அவனுக்கு விஷத்தை வெல்லும் ஆற்றலைக் கொடுக்கிறாய். பறவைகளின் அரசனாக விளங்கும் கருடனைப் போல, சர்ப்பங்களை அடக்கும் சக்தியைக் கொடுக்கிறாய். அமுத நாடியுடன் இருக்கும் பார்வையைத் தந்து, அந்தப் பார்வையினால் விஷ நோய்கள் அனைத்தையும் விரட்டுகின்ற உயர் நிலையைக் கொடுக்கிறாய்! உன்னை வணங்குகின்றேன் தாயே!

பிரயோகிக்கும் முறை:

இந்த மந்திரத்திற்கான யந்திரத்தை தாமிரத்தகட்டில் விபூதியினால் வரைந்து கொள்ள வேண்டும்.

தினமும் 1000 முறை வீதம் 45 நாட்கள், வடக்கு முகமாக அமர்ந்து ஜபிக்க வேண்டும்.

வில்வத்தைக் கொண்டு துர்கா அஷ்டோத்ர அர்ச்சனை செய்தல் நலம்.

பால் பாயசம், தேங்காய், பழம், எள் சாதம் ஆகியவை கொண்டு நிவேதனம் செய்து வரவும்.

இதனை முறைப்படி செய்து, மந்திரப் பிரயோகம் செய்யும் பொழுது, விஷ நோய்கள் குணமாவதோடு விஷ ஜந்துக்களை கட்டுப்படுத்துகின்ற ஆற்றலும் உருவாகும்.



# துடைப்பத்தின் மகிமை

~ ஆ. விஜய பிரபு (ஆஸ்ட்ரோவேத் ஜோதிடர்)

பண்டைய காலத்தில் மனிதன், வீடு வாசல் இல்லாமல் திரிந்து வாழ்ந்தான். அதன் பிறகு குகைகளிலும், மரப்பொந்துகளிலும் வாழ்ந்தான். அவ்வாறு வாழும் பொழுது நிறைய கஷ்டங்களையும், நோய் நொடிகளையும் அனுபவித்து அதன்பின் தன் உடலையும், இருக்கும் இடத்தையும் சுத்தம் செய்ய வேண்டும் என்று தெரிந்து கொண்டான். மனிதன் வாழும் பொழுது தான், வாழ்க்கை அவனுக்கு தன்னை உணர்த்துகிறது.

ஒருவர் வாழும் வீட்டையும், வசிக்கின்ற இடங்களையும் சுத்தம் செய்ய, காட்டில் விளையும் ஈஞ்சி என்று சொல்லப்படுகின்ற ஒரு வகைப் புல்லினைப் பயன்படுத்துகிறோம். வீட்டின் வெளிப்புறங்களை சுத்தம் செய்ய, தென்னங்குச்சித் துடைப்பத்தையும் பயன்படுத்துகிறோம். கிராமங்களில் பனமைரக்குச்சி துடைப்பத்தையும் பயன்படுத்துகிறோம்.

துடைப்பங்கள் வாங்கும் நாள் நல்ல நாளாக இருந்தால் வீட்டில் நன்மையே நடக்கும். கெட்ட நாளில் வாங்கினால் கஷ்டமும் துன்பமும் வரும். துடைப்பம் வாங்கும்போது இரவு நேரத்தில் வாங்கக்கூடாது. அவ்வாறு வாங்கினால், சண்டை சச்சரவு மற்றும் கடன் ஏற்படும்.

துடைப்பம் வாங்க கூடாத நாள் மற்றும் நட்சத்திரம்
ஞாயிற்றுக்கிழமை - சித்திரை
வியாழக்கிழமை - கேட்டை
வெள்ளிக்கிழமை - பூராடம்
சனிக்கிழமை - ரேவதி

மீறி வாங்கினால், வீட்டில் களவு போகும். மரணச் செய்தி வரும். கோர்ட்டு, கேஸ், வம்பு, வழக்கு எனக் கடுமையான பிரச்சனை வரும்.

நல்ல நாளில் ஈஞ்சி விளக்குமாறு வாங்கினால் கடன்தொல்லையில் இருந்து விடுபடுவர்.

இராகு காலத்தில் சுத்தம் செய்பவர்கள் பெரும் கடனாளி. எமகண்டத்தில் சுத்தம் செய்பவர்கள் பெரும் நோயாளி. தினமும் இரவில் வீட்டைப் பெருக்குபவன் கடனாளி. இரவில் எமகண்டத்தில் சுத்தம் செய்பவர்கள் நிரந்தர மனநோயாளி. தினமும் பகலில் 12:00 - 1:00 மணிக்குள், வீட்டை ஒருவர் சுத்தம் செய்தால், அவர் உடல் உறுப்புகள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

துடைப்பத்தை தென்மேற்கு மூலையில் வைத்தால் வீட்டில் உள்ள செல்வம் அழியும். வடகிழக்கு மூலையில் வைத்தால் குழந்தை பாக்கியம் இருக்காது. தொழில் ஸ்தாபனங்களை மூடுதல். வீட்டில் உள்ள குழந்தைகள் படிக்காமல் போகும். தென்கிழக்கு மூலையில் வைத்தால் நிலவு செரிமானமின்மை ஏற்படும், தற்கொலை முயற்சி நடைபெறும். வடமேற்கு மூலை வாயு மூலையில் வைப்பது மிகவும் நன்மை தரும்.

துடைப்பத்தை யாரிடமும் இலவசமாக (அ) ஓசியாக வாங்கக்கூடாது. மீறினால் பெரும் கஷ்டம் வரும். புதுத் துடைப்பத்தை வாங்கி வந்து, அதன்மீது மஞ்சள் நீர் தெளித்து வணங்கி, அதன் பின் சுத்தம் செய்தால் செல்வம் கொழிக்கும்.



# இறைவன் இருக்கின்றான்

~ ரா.பன்னீர் செல்வம்

நள்ளிரவு 1 மணி! "கங்கா மில்" தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது.

டெலிபோன் மணியடிக்க, இந்த நேரத்தில் யார்? என நினைத்தபடியே, உறக்கம் கலைந்த கங்காதரன் போனை எடுக்க.... மறுமுனை கூறிய செய்தியால் பதறினார்! அருகில் தூங்கிக் கொண்டிருந்த மனைவியும் விழித்துக்கொண்டு, "ஏன் இப்படிப் பதட்டப்படுகின்றீர்கள்? என்ன ஆனது?" எனக்கேட்க....

மில்லில் தீ விபத்து என்று மட்டும் சொல்லிவிட்டு கிளம்பிவிட்டார், கங்காதரன்! பதட்டம் அடைந்த அவரது மனைவி தெய்வக்கனி, நேராக பூஜையறைக்குச் சென்றாள்!



தான் போட்ட மாலை வாடாத வண்ணம் அந்த போட்டோவில் ரிஷப வாகனத்தின் மீது ஆரோகணித்து உமையாளுடன் வீற்றிருந்த சிவபெருமானைக் கண்டு கை கூப்பினாள்! கண்களில் நீர் திரண்டது!

"இறைவா.... ஏன் இந்த சோதனை?! எங்களுக்கு சோதனை தர நீ விரும்பினால் வேறு ஏதாவது செய்திருக்கலாமே! இந்த இரவு நேரத்தில்.... நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பணிபுரியும் சமயத்தில் தீவிபத்தா??

இறைவா! அந்த மில்லே அழிந்து, எங்கள் செல்வம் கரைந்தாலும் கவலையில்லை! ஆனால், அங்கு இருக்கும் எந்த உயிருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படக்கூடாது! ஓர் உயிர் பறி போனாலும் காலமெல்லாம் அந்தக் காயம் எங்கள் மனதை விட்டு மறையாதே! இறைவா! இதுவும் உன் செயல்தான் என்பதை நானறிவேன்; இது நற் செயலாய் அமையட்டும்; தொழிலாளர்களின் உயிரைக் காப்பாற்று!" என வேண்டி நின்றாள்!

லுங்கி பனியனுடன் காரைவிட்டு இறங்கிய கங்காதரன் வானளாவ வளர்ந்து கொண்டிருக்கும் தீயைப் பார்த்து பிரமை பிடித்தவர் போல் நின்றார்! தீயணைப்பு வண்டிகளும், ஆம்புலன்சும் வந்தவண்ணம் இருந்தன. தீயை அணைக்கும் பணியில் மும்முரமாக அனைவரும் ஈடுபட்டனர்!

எங்கு பார்த்தாலும் ஓலம்! "அதை எடு; தண்ணீரை ஊற்று! இந்தப் பக்கம் ஓடி வா! ஆ...... அய்யோ... அம்மா...." என்ற ஓலங்கள்!

நிலைகுலைந்து போனார் கங்காதரன்! எல்லாத் தொழிலாளர்களும் ஓரளவு தப்பித்திருக்க, நான்கைந்து தொழிலாளர்கள் உள்ள மாட்டிக்கொள்ள அவர்களும் மீட்கப்பட்டு, ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்! நிலைமை ஓரளவு கட்டுக்குள் வந்திருந்தது! தீக்கங்குகள் நீர்த்திரையால் மறைக்கப்பட்டு, புகை மண்டலம் வான்நோக்கி வளர்ந்தது!

ஒரு நாற்காலியில் அமர வைக்கப்பட்டார், கங்காதரன்! சுற்றிலும் தொழிலாளர்கள்! யாரும் எதுவும் பேசவில்லை! மயான அமைதி நிலவியது! மருத்துவமனைக்குச் சென்றிருந்த மேனேஜர் போன்

செய்தார். ஐந்து பேரில் ஒருவர் தான் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளார்; மீதி நான்கு தொழிலாளர்களுக்கும் ஆபத்து அதிகம் இல்லை என்றார்!

"ஒருவருக்கும் எந்த அசம்பாவிதமும் ஏற்பட்டுவிடக்கூடாது", என நினைத்தார் கங்காதரன்! அவரது நெஞ்சில், ஒரு வாரத்துக்கு முன்னால் நடந்த சம்பவம் நிழலாடியது!



பெரும் செல்வந்தரான சந்திரசேகரன் மகளைத், தன் மகனுக்குப் பெண் பார்க்க, மனைவியுடன் சென்றிருந்தார், கங்காதரன்! இவரது மனைவி தெய்வக்கனியை கோவிலில் பார்த்துப் பழகிய சந்திரசேகரனின் மனைவி, தன் மகளை மருமகளாக்கிக் கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்ள, அதன்படியே இந்த நிகழ்ச்சி நடந்தது!

ராஜசேகரன் சொன்னது இப்போது, நினைவுக்கு வந்தது! "உங்கள் மகன்கள் இருவருமே பட்டம் பெற்றிருந்தாலும் தொழிலில் கவனம் செலுத்தாமல் மனம் போன போக்கில் பொறுப்பில்லாமல் வாழ்வது எனக்குத் தெரியும்! ஆனாலும் உழைப்பால் உயர்ந்து, தெய்வ நம்பிக்கையோடு வாழும் உங்கள் குடும்பத்திற்கு என் மகளை மருமகளாக அனுப்பச் சம்மதிக்கிறேன்! திருமணத்திற்குப் பிறகாவது, உங்கள் மகனைப் பொறுப்புள்ளவனாக மாறச் சொல்லுங்கள்! உங்களுக்குப் பின், மில் நிர்வாகத்தை கட்டிக் காக்கும் திறமை வர வேண்டும் அல்லவா?!" என அவர் சொன்னது உண்மை தானே!? என எண்ணினார், கங்காதரன்! ஒரு தொழிலாளியாக வாழ்க்கையைத் தொடங்கி இன்று மில் அதிபர் ஆனாலுங்கூட, தன்னை ஒரு தொழிலாளியாகவே நினைத்து உழைப்பவர் கங்காதரன்! இவரது மனைவி தெய்வக்கனியோ, சிவனுக்கு முன்னால் இந்த செல்வமெல்லாம் செல்லாதது; நிலையாதது என நினைத்து, பகட்டை நீக்கி, பக்தியும் கருணையும் பொங்க வாழ்பவர்!

இவர்களுக்குத்தான் இந்த சோதனை! "இந்த மில்லும் அந்த வீடும் மட்டும் தானே நமக்கு இருக்கும் சொத்து! மில் இப்படி ஆகிவிட்டதே! இந்த நஷ்டத்தை சரிக்கட்ட எவ்வளவு காலம் ஆகும்?... மூத்த மகனின் திருமணம் நடக்குமா?" என்ற சிந்தனையினூடே, அங்கிருந்தவர்களிடம் அடுத்து நடக்க வேண்டியதைச் சொல்லிவிட்டு மருத்துவமனைக்கு விரைந்தார், கங்காதரன்!
தானும் ஒரு தொழிலாளி என நினைத்துக் கொண்டிருப்பதால் எந்த ஒரு தொழிலாளியின் உயிரும் பாதிக்கப்படக்கூடாது என்ற ஆதங்கத்துடன் காரில் ஏறி விரைந்தார். இதனிடையே நடந்ததை எல்லாம் தன் மனைவிக்குத் தெரியப்படுத்தினார்!...

மருத்துவமனையில்..... கவலைக்கிடமாக இருந்த ஒரு தொழிலாளிக்கும் ஆபத்து ஏதுமில்லை; ஓரிரு மாதங்களில் சரியாகி விடும்; மற்றவர்கள் இன்னும் ஒரு வாரத்தில் வீட்டிற்குத் திரும்பலாம் என்ற ஆறுதல் செய்தி கிடைத்திட, கங்காதரன் மனம் நிம்மதி அடைந்தது!
மீண்டும் மில்லுக்கு வந்தார்! தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் அறிய போலீசார் விசாரணை நடத்த, மின்கசிவே காரணம் எனத் தெரிய வந்தது. அனைத்து நடைமுறைகளும் முடிந்தது!
அதிகாலையில் வீடு திரும்பினார், கங்காதரன்! வீட்டிற்குள் நுழைந்தவர் நேராக பூஜை அறை நோக்கி சென்றார்! மனைவி அங்கு தான் இருப்பாள் என்று அவருக்குத் தெரியும்!
சுவாமி படத்துக்கு அருகில் நின்று, கண்களை மூடி, கரம்கூப்பி வேண்டியபடி இருந்தாள் தெய்வக்கனி!
"தெய்வா ..."
"வந்துட்டீங்களா.... என்ன ஆச்சு?".... அமைதியுடன் கேட்டாள்!
"நீ கும்பிடும் தெய்வம் நம்மைக் கைவிடவில்லை! மருத்துவமனையில் தொழிலாளர்கள் நலமாக உள்ளனர்!
அவர்கள் உயிருக்கு எந்த சேதாரமும் இல்லை"...
"இறைவா...." என மீண்டும் வணங்கியவள், ஹாலுக்கு வர.... பின் தொடர்ந்தார் கங்காதரன்!

அமைதியாக இருந்த மனைவியிடம், "மில் இப்படி ஆனது பற்றி எனக்குக் கொஞ்சமும் கவலையில்லை! ஆனால், மூத்தவனின்

திருமணம்...?..." என்று மனைவியைப் பார்த்தார்! "எல்லாம் நடக்கும்; இறைவன் இருக்கிறான்!" என்றாள்!

"நினைவு தெரிந்த நாள் முதல் உழைப்பவன் நான்! இப்போதும் ஒரு தொழிலாளியாக என் வாழ்க்கையைத் தொடர முடியும்! ஆனா, நம்மையே நம்பி இருக்கிற தொழிலாளிகளோட நிலை?!... நம்ம பையனோட கல்யாணம்?!.. இத பத்தி தான் எனக்குக் கவலையா இருக்கு! ஏன்னா.... மில்ல புனரமைச்சி உற்பத்தி தொடங்க ஆறு மாசமாவது ஆகும்! இப்ப.... கையிருப்புன்னு பெருசா பணம் எதுவும் இல்ல! இதப் பத்திதான் யோசனையாய் இருக்குது!" என்றார், கங்காதரன்!

தெய்வக்கனி அமைதியாகச் சொன்னாள்; "நாம என்ன வரும்போது இதையெல்லாமா கொண்டு வந்தோம்! கருணையோடு அந்த கடவுள்தானே கொடுத்தாரு! இந்த வசதி, செல்வாக்கு எல்லாம் இடையில வந்தது தானே!?.. நமக்குன்னு ஒரு வாய்ப்பு கொடுத்து உயர்த்தி விட்ட கடவுள், இன்னைக்கு அத தானே எடுத்துக்கிட்டாரு! ஆனா, மறுபடியும் கொடுப்பாரு! எனக்கு நம்பிக்க இருக்குதுங்க!"

"ஆனா.... நிலைமைய நம்ம பிள்ளைங்க எப்படி எதிர்கொள்ளப் போறாங்க!? அத நெனைச்சுத்தான்....." என இழுத்தார்!

கவலையே படாதிங்க; கஷ்டத்துலயும் வறுமையிலயும் நாம வாழ்ந்தோம்; வளர்ந்தோம்!..... ஆனா, நம்ம பையன்களுக்கு வறுமை தெரியாமல் வளர்த்தோம்! அவனுங்க ரெண்டு பேருமே பொறுப்பில்லாம இருக்காங்க கேட்ட நேரத்துல பணம்.... சொகுசான வாழ்க்க.... இந்த வசதியெல்லாம், ஒண்ணும், ஒரு வருஷத்துக்கு அவங்க அனுபவிக்க முடியாது இல்ல! இந்த நேரத்துல தான் அவங்களுக்கு மேடு, பள்ளம் வரும்ங்கறத உணர வைக்கணும்! இந்த சோதனைய கடவுள் நமக்கா கொடுத்தாரு..... இல்லைங்க! இப்பவும் நாம பழைய வாழ்க்கைய- வறுமைய ஏத்துக்கத் தயாரா இருக்கோம்! ஆனா..... இப்படி ஒரு சூழ்நிலையக் கொடுத்து நம்ம பையன்கள சரி பண்றதுக்கு கடவுள் முடிவெடுத்துட்டுடாரு. சரிதானே?!" எனக்கேட்டாள்!

"உண்ம தான் தெய்வா! இந்தத் தலைமுறைக்குப் பெத்தவங்க படுற கஷ்டம் தெரியறதில்ல! பல பெற்றோர்களும் புள்ளங்கள வறும தெரியாமல் வளர்க்கணும்னு நெனைக்கிறாங்க! நானுங் கூட அப்படித்தான் நெனைச்சேன்! ஆனா, அது தப்புன்னு இப்பதான் தெரியுது!" என்றார்!

"நம்ம புள்ளைங்க கடவுள நம்பறதே இல்லைங்க! கஷ்டம் வந்துடுச்சில்ல; இப்ப கண்டிப்பா நம்புவாங்க! அதுக்காகத்தான் கடவுள் இப்படி சோதிக்கிறாரு!" என்றாள்.

துன்பம் நேரும் போது துணை தேவை! அந்தத் துணை கடவுளைத் தவிர வேறேதும் இல்லை!

தொலைவில்..... ஆலய மணியோசையின் சப்தம் ஆறுதலாய் ஒலித்தது.





KABA SURA
KUDINEER

15 herbs effective against Viral infections, fever, cough and breathing difficulties

Call: 88702 88701

# கந்த சஷ்டி சிறப்புகள்...



~ சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்.

'முத்தமிழில் பாட வந்தேன், முருகனையே வணங்கி நின்றேன்' என்ற பாடல் என்றும் நம் மனதை மயிலிறகால் வருடுவது போன்று இருக்கும்.

'திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால் முருகா, திருத்தணி மலை மீது எதிரொலிக்கும்' என்ற பாடலும், 'சரவணப் பொய்கையில் நீராடி, துணை தந்தருள் என்றேன் முருகனிடம்' என்ற பாடலும், 'செந்தூர் முருகன் கோயிலிலே ஒரு சேதியை நான் கேட்டேன்' என்ற பாடலும், 'சிங்கார வேலனே தேவா' என்ற பாடலும், 'நாடு அறியும் நூறு மலை, நான் அறியும் சுவாமி மலை, சுவாமி மலை' என்ற பாடலும், 'அறுபடை வீடு கொண்ட திருமுருகா' என்ற பாடலும், 'மனமே முருகனின் மயில்வாகனம்' என்ற பாடலும், 'முருகனுக்கு ஒரு நாள் திருநாள்' என்ற பாடலும், 'பழம் நீ அப்பா, தமிழ் ஞான பழம் நீ அப்பா' என்ற அற்புதப் பாடலும், 'கந்தன் என்றொரு மந்திரத்தை' என்ற பாடலும்,

'கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும், கந்தனே உன்னை மறவேன்' என்ற பாடலும், 'முதல் வணக்கம் எங்கள் முருகனுக்கு' என்ற பாடலும், 'பன்னிரு விழிகளில் பரிவுடன் ஒரு விழியால் என்னை நீ பார்த்தாலே போதும்' என்று கம்பீரப் பாடலும், 'நீ அல்லால் தெய்வமில்லை' என்ற உருகவைக்கும் பாடலும், 'உள்ளம் உருகுதய்யா முருகா' என்ற கனிவு ததும்பும் கற்கண்டுத் தமிழ்ப் பாடலும், 'அழகென்ற சொல்லுக்கு முருகா' என்ற இனிய பாடலும், 'வள்ளிக் கணவன் பெயரை தினமும் சொல்லடா தம்பி' என்ற பாடலும், எல்லாவற்றுக்கும் மேலாக, அருணகிரிநாதர் அருளிய 'முத்தைத்திரு' எனத் தொடங்கும் அருள் முத்தான பாடலும் ஒலிக்கும்போது, செவி மட்டுமா குளிரும், நம் உள்ளத்தை,

உயிரைக் குளிர்விக்கும். முருகப்பெருமானை மனம், மொழி, மெய் ஒன்றுபட, பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு திருமுருக திருவருளால் அகத்தியர், அருணகிரிநாதர் அவ்வை மூதாட்டி, குமரகுருபரர், சிவப்பிரகாச சுவாமிகள், வள்ளற்பெருமான் இராமலிங்க சுவாமிகள், நக்கீரர், போன்றோர் அழியாத சிறப்புமிகு பாமாலைகள் எழுதி முருகனருள் பெற்றனர். பாம்பன் ஸ்வாமிகள் முருக தரிசனம் பெற்று அற்புதப் பாடல்களைப் பாடி மகிழ்ந்தார். கண்ணாடியில் முருக தரிசனம் பெற்றவர் வடலூர் வள்ளலார் என்று போற்றப் பெறும் அருட்பிரகாச வள்ளலார்.

இருபதாம் நூற்றாண்டிலும் கே.பி. சுந்தராம்பாள், சீர்காழி கோவிந்தராஜன், டி.எம். சௌந்தரராஜன் போன்றோர் தம் தெய்வீகக் குரலால் பாடி உருகியும் நம்மையும் உருக வைத்தனர். மருதமலையை நாளும் துதித்த திரைப்படத் தயாரிப்பாளர் சின்னப்பா தேவர், முருகன் அருட் புகழை அல்லும் பகலும் போற்றி உருகியவர்.

அறுபத்து நான்காவது நாயன்மார் என்று அன்பொழுக போற்றப் பெறும் அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், வயலூர் முருகன் புகழைத் தம் உயிர் உள்ளவரை போற்றி வாழ்ந்த மெய் அன்பர். முருகனை வழிபட்டோர் தோற்றதாக சரித்திரம் இல்லை. ஏன் என்றால் வெற்றி வேல் கொண்ட வேல் முருகன் ஆயிற்றே! சர்வேஸ்வரனின் நெற்றிக்கண்ணிலிருந்து வெளிப்பட்ட தீப்பொறியானது சரவணப் பொய்கையில் மலர்ந்த ஆறு தாமரைப் பூக்களில் விழுந்து, ஆறு குழந்தைகள் ஆனது. ஆறு தாமரைப் பூக்களில் அவதரித்த ஆறு குழந்தைகளையும் பேரானந்தத்தோடு, பராசக்தி பரிவுடன் அணைத்து மகிழ, ஆறு முகங்களோடு ஒரு முருகக் கடவுளாய்த் தோன்றினான் செந்தில் வேலவன்.

தமிழ்க்கடவுள் முருகப்பெருமானின் அருள் வரலாற்றை, கச்சியப்ப சிவாச்சார்யாரின் கந்தபுராணத்தைத் திருத்தியவரும் முருகப்பெருமான் தான்.

கந்தர் அலங்காரம், கந்தர் கலிவெண்பா, கந்தர் அனுபூதி, திருப்புகழ்,

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், கந்த சஷ்டி கவசம், சண்முக கவசம், வேல் விருத்தம், போன்ற தெய்வீகத்தமிழ் மணக்கும் பாடல்களில், முருகப் பெருமானின் திருவருள் குறித்து பெரிதும் பேசப் பெறுகின்றன.
சர்வேஸ்வரனால் படைக்கப்பட்ட அருள் முருகன், உலகம்மை தந்த சக்தி வேலைக் கொண்டு சூரபத்மனை வதம் செய்ததையே 'சூரசம்ஹாரம்' என்பார்கள்.

முருகப்பெருமானுக்கும், சூரபத்மனுக்கும் நடந்த போரில் சூரபத்மன் சக்தி வேலால் தாக்குண்டு வீழ்ந்தான். இதற்குமேல் தப்பிக்க வழியில்லை என்றவுடன் பெரிய மாமரமாக மாறி விடுகிறான்.
முருகப்பெருமான் தன் வேலால் அம்மாமரத்தை இரண்டாகப் பிளக்க, அதில் ஒருபாதி சேவலாகவும், ஒரு பாதி மயிலாகவும் மாறிவிடுகிறது முருகப்பெருமான் மயிலைத் தன் வாகனமாகவும், சேவலைத் தன் கொடியாகவும் ஆக்கிக் கொள்கிறார் சக்தி வேலாயுதம் முருகப்பெருமானின் தனிப்பெரும் சிறப்பு மிக்கது.
வெற்றியை தரும் வீரவேல். வேல் என்பது ஞானவேலாகும்.

அறிவு ஆழமாகவும், பரந்ததாகவும், கூர்மையானதாகவும் இருக்க வேண்டும் என்பதை உலகுக்கு உணர்த்தும் வண்ணம் நீண்ட அடிப்பாகத்தையும், மேல் பகுதியின் அடி அகன்றும் நுனிப்பகுதி கூர்மையானதாகவும் அமைந்துள்ளதைக் காணலாம்.

அனைத்து முருகன் ஆலயங்களிலும் ஐப்பசி அமாவாசையை அடுத்த ஆறு நாட்கள், பக்திப் பரவசத்துடன் விரதமிருந்து இனிதே கொண்டாடப் பெறுவதே கந்த சஷ்டி!

இது, அசுரனை அழித்த முருகப்பெருமானின் வெற்றி விழாவாகக் கொண்டாடப்படுகிறது.
'சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்' என்பது எளிய மொழி என்றாலும், அதனுள் அற்புதக் கருத்து உள்ளடக்கி உள்ளதை உணரலாம். அதாவது சஷ்டியில் விரதம் இருந்தால் மகப்பேறு பெற்று, முருகனே, குழந்தை வேலனே குழந்தையாகப் பிறப்பான் என்பது ஐதீகம்.

திருமணம் ஆகாத பெண்கள் சஷ்டி விரதம் இருந்தால், திருமுருகத் திருவருளால் அன்பும் அழகும் மிக்க நல்ல கணவன் கிடைப்பர்.

திருமணம் ஆகிப் பல வருடம் கடந்தும், 'இல்லை ஒரு பிள்ளை' என ஏங்கித் தவிக்கும் பெண்கள், கந்த சஷ்டி விரதம் இருந்தால் தங்க விக்கிரகம் போல் பிள்ளைப் பேறு கிடைக்கும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும். இம்மாதம் (நவம்பர் 2021) 4 ஆம் தேதி வியாழக்கிழமை தீபாவளி நாளில் தொடங்கப் பெறும் கந்த சஷ்டி, 9.11.2021 செவ்வாய்க்கிழமை சூர சம்ஹாரப் பெருவிழாவுடன் இனிதே நிறைவு பெறுகிறது.

ஆறுபடை வீடுகள் மட்டுமல்ல; அகிலத்தில் உள்ள அனைத்து முருகன் ஆலயங்களிலும் மிகச் சிறப்பாக அபிஷேக ஆராதனைகள், தூப தீப ஆராதனைகள், திருவீதி உலா என அற்புதமாக நடைபெறும் கந்தசஷ்டிப் பெருவிழா நாட்களில், முறையாக விரதமிருந்து, வெற்றி வேலவனை மனமுருக வழிபடுவோம்.



# பாக்கியங்களை அள்ளித்தரும் ஸ்ரீ பகமாலினி யந்திரம்

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

பதினைந்து திதிகளை ஆளும் நித்திய தேவிகளில், இரண்டாம் திதியான திவிதியை திதியை ஆள்பவர் ஸ்ரீ பகமாலினி தேவி ஆவார். சந்திரனின் ஆதிக்கம் நிறைந்தவர் ஸ்ரீ பகமாலினி தேவியாவார்.

பகமாலினி என்ற சொல்லில், பக என்றால் பக்கியம் எனவும் மாலினி என்பது பூ மாலை எனவும் பொருள்படும். நாம் வாழும் பூமியுடன் நெருங்கிய தொடர்பு, இந்த பாகமாலினி அன்னைக்கு இருப்பதால், பூலோக பாக்கியங்கள் அனைத்தையும் அனுபவிக்க ஸ்ரீ பகமாலினி யந்திரத்தை வைத்து பூஜை செய்து வந்தால், திருமணம் தடை பட்டவர்களுக்குத் திருமணம் பாக்கியத்தையும், குழந்தை இல்லாதவர்களுக்குப் புத்திர பாக்கியத்தையும் அது அருளும். ஸ்ரீ பகமாலினி யந்திரம் இத்தகைய ஆற்றல் வாய்ந்தது ஆகும். இது மட்டும் அல்லாது, மனோ தைரியமும், தன்னம்பிக்கையும் இல்லாதவர்களுக்கு, தைரியமும் தன்னம்பிக்கையும் கொடுக்கவல்லது இந்த ஸ்ரீ பகமாலினி யந்திரம் ஆகும். மேலும், கலைத் துறையைச் சார்ந்தவர்களுக்கு, ஆக்க அறிவையும் இந்த ஸ்ரீ பகமாலினி யந்திரம் வழங்கும். இந்த யந்திரத்தைத் தொடர்ந்து பூஜித்து வந்தால், அனைவரையும் வசீகரிக்கும் ஆற்றலையும் அது அருளக்கூடியது. இந்த ஸ்ரீ பகமாலினி யந்திரத்தை பூஜை அறையில், கிழக்கு அல்லது வடக்கு நோக்கி வைத்து, சந்தன குங்குமத் திலகமிட்டு தினமும் மல்லிகை மலர் கொண்டு பூஜித்து தீப தூப ஆராதனை காட்டி, கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை 108 முறை கூறிவருவதால், மேலே கூறிய அனைத்து பாக்கியங்களையும் குறைவின்றிப் பெறலாம்.

ஸ்ரீ பகமாலினி நித்ய தேவி காயத்ரி மந்திரம்:
ஓம் பகமாலின்யை வித்மஹே
ஸர்வ வஸங்கர்யை தீமஹி
தன்னோ நித்யா ப்ரசோதயாத்



Bhagamalini Yantra



# கடலூர் பாடலீஸ்வரர் கோயிலில் அருந்தவ நாயகியின் உயர் தவம்.. தீபாவளி சிறப்பு தரிசனம்

~ சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்.

அன்னையை அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகி என்பார்கள். அவளை, சர்வ சக்தியாகத் திகழக்கூடிய உமாமகேஸ்வரியாக வழிபடுகின்றோம். சக்தி வேறு சிவம் வேறல்ல, சிவசக்தியே ஒன்று பரம்பொருள்!
"நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க, இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்று தன் இதயக் கமலத்தில் ஈசனைப் பிரதிஷ்டை செய்து காதலாகிக் கசிந்துருகி அருந்தவம் புரிந்த அன்னை பராசக்தி.

காஞ்சியில் ஊசி முனையில் கடும் தவம் இருந்தவள் உலகம்மை!

முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரியில், நித்தம் தவம் செய்யும் பகவதியாக பார்வதி தேவி அருள் பாலிக்கின்றாள்!
தீபாவளி நாளில், அமாவாசைப் பொழுதில் பெண்கள் கடும் விரதமிருந்து கேதார கௌரி நோன்பு எடுத்து, கேதார ஈஸ்வரரையும் கேதார ஈஸ்வரியையும் உள்ளம் உருக வழிபடுவர். இந்த நோன்பு, தங்கள் கணவன் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் பெற்று, நீண்ட ஆயுளுடனும், எந்நாளும் பிரியாத நல்ல துணையாக அமைய அம்மனை வேண்டி வழிபடுவர். இந்நாளில் அம்மனை வழிபட்டால், அது ஈஸ்வரனை வழிபடுவதற்குச் சமம் ஆகும்.

இந்த கேதார ஈஸ்வரி விரதத்தைத் தொடங்கியவரே அன்னை பராசக்தி.
கடலூர் அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயிலில் இந்த அதிசயம் நிகழ்ந்துள்ளது. அப்படி என்ன அதிசயம் என்போர், இத்தலத்திற்கு வந்தாலே போதும், அதை உணரவும் முடியும், தரிசிக்கவும் முடியும். பெரியநாயகி எனவும், தோகையம்பிகை எனவும், பிரவநந்த நாயகி எனவும் வழங்கப்பெறும் அன்னை பார்வதி தேவி, அரூபமாக (உருவமில்லாமல்) இருந்து ஈஸ்வரனை எண்ணித் தவம் இருந்த தலம் இது! பள்ளியறை இறைவன் திருக்கோயிலில் அமைந்து, நாள்தோறும் இறைவியே பள்ளியறைக்கு எழுந்தருளுவது எங்கும் இல்லாத தனிச்சிறப்பு!

உலகத்து உயிர்கள் உய்யும் பொருட்டு ஈசன் திருவிளையாடல் நிகழ்த்திடத் திருவுளங் கொண்டு, இறைவியுடன் சொக்கட்டான் ஆடினார். பல முறை ஆடியும் தோல்வி அடைந்தார் ஈசன்! ஆனால் வெற்றி தனக்கே எனக்கூறிய பெருமானின் திருக்கண்களை அம்பிகை தன் திருக்கரங்களால் புதைத்தாள்.

இதனால் எல்லா உலகங்களும் இருண்டு அனைத்து செயல்களும் நின்று போயின. இதனைக்கண்ட இறைவி தன் செயலால் ஏற்பட்ட துன்பங்கள் கண்டு மிகவும் மனம் வருந்தி, தனக்குப் பிராயச்சித்தம் தர ஈசனிடம் வேண்டினாள்.
அதற்கு சர்வேஸ்வரன், இறைவியை பூலோகம் சென்று அங்குள்ள சிவாலயங்களை தரிசித்து பூஜிக்கும் படியும், அவ்வாறு பூஜிக்கும் போது எந்தத் தலத்தில் இடது கண்ணும், இடது தோளும் துடிக்கின்றதோ அந்தத் தலத்தில் ஆட் கொள்வதாகக் கூறினார்!

அதுபோல, இறைவியும் பல சிவாலயங்களைத் தரிசித்து வருங்காலத்தில், இத்தலத்திற்கு வந்தபோது, அன்னைக்கு இடது



கண்ணும், இடது தோளும் துடித்ததால் இத்தலத்திலேயே தங்கி அரூபமாக (உருவம் இல்லாமல்) ஈசனை பூசித்து பேறு பெற்ற புகழ்மிகு சிவத்தலம்.

இத்தல விருட்சம் பாதிரி மரம். 12 வகைகளான பூக்கள் பூக்கும் அதிசய மரமே பாதிரி மரம். இந்தப் பாதிரி வனத்தில் பாதிரி மரத்தின் அடியில் சர்வேஸ்வரனை எண்ணிக் கடும் தவம் இருந்தாள் பராசக்தி!

ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் சோதியை எண்ணி வழிபட்ட அருந்தவநாயகியாம் அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகி உலகம்மையின் உயரிய தவத்தைக் கண்ட ஈசனும், தன் உடலில் சரிபாதியைத் தந்தார்!

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்

என்று காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க மலர் கரங்களால் மனதார வணங்கினாள் உமா மகேஸ்வரி அங்கையற்கண் அம்மையாக, அகிலாண்டகோடி நாயகியாக, அறம் வளர்க்கும் அம்பிகையாக, அருந்தவ நாயகியாக, அருள்நிறை அம்பிகையாக, ஞானாம்பிகையாக, திருவுடையம்மையாக, திரிபுர சுந்தரியாக, பாகம் பிரியா அம்பிகையாக, பெரிய நாயகியாக, மீனாட்சி அம்பிகையாக, சௌந்தராம்பிகையாக, பகவதி ராஜ அம்பிகையாக அருள் வடிவெடுத்து, ஈசனருளால் தன்னை மனமுருக வேண்டுபவர்களுக்கு பதினாறு வகைச் செல்வங்களை அருளுவதே உலகம்மையின் உயரிய உள்ளம்.

இந்த தீபாவளித் திருநாளில், அமாவாசைப் பொழுதில், கேதார கௌரி விரதத்தை, திருமணம் ஆகாத இளம்பெண்களும், சுமங்கலிப் பெண்களும் முறையாக, ஆத்மார்த்தமாக அனுஷ்டித்தால், நல்ல கணவன் வாய்ப்பர். கணவன், குழந்தைகளுக்கு நீண்ட ஆயுளும் கிட்டும், நிறைவான செல்வங்களும் வந்தடையும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை ஆகும்.

# அரிய ஆன்மீகத் தகவல்

~ ரா.பன்னீர் செல்வம்

திருவையாறில் உள்ள பஞ்சநதீஸ்வரர் ஆலய வளாகத்தில் ஆண்டுதோறும் ஆடி அமாவாசை அன்று, இறைவன் ஈசன், திருநாவுக்கரசர் என்னும் அப்பர் பெருமானுக்கு, கயிலைக் காட்சியை காட்டிய விழா சிறப்புடன் நடைபெறுகிறது! லட்சக்கணக்கான மக்கள் கலந்து கொள்ள, இறைவன் உமையன்னையோடு ரிஷப வாகனத்தில் ஆரோகணித்துக் காட்சி கொடுக்கும் அந்தத் தருணத்தில், எதிரே ஒரு சிறு சப்பரத்தில் அப்பர், இறை தரிசனம் பெற காத்திருப்பதும், ரிஷபாரூடரான இறைத் திருமேனிக்கு ஆரத்தி காட்டுகின்ற நேரத்தில் அந்தக் கயிலைக் காட்சியை கண்ட அப்பர் பெருமான், ஆனந்தக் கூத்தாடுவது போல சப்பரம் சுமந்து வருவோர் ஆடுவதும் அப்பரே களி நடனம் புரிவது போன்ற கண்கொள்ளாக் காட்சியாய் கண்முன்னே விரிவது பேரானந்தத்தைத் தருவதாகும்!

இந்த ஐயாறப்பர் ஆலயத்தின் மூன்றாம் பிரகாரத்தில் ஓரிடத்தில் நின்று “ஐயாறப்பா“ என்று குரல் கொடுத்தால் அந்த ஒலியானது ஏழு முறை திரும்ப எதிரொலிக்கும் அதிசயம் நிகழ்கின்றது! இந்த ஆலயக் கருவறையில் அருட்காட்சி தருகின்ற ஐயாறப்பரை கண் குளிர தரிசனம் செய்து, ஆரத்தி ஒளியில் அவரது திருமேனியை அணுவணுவாய் உள்வாங்கி, இறைவனை வலம் வரும் நோக்கில் கருவறையை வலம்வர எண்ணினால், ஓர் ஐதீகம் அங்கே தடை போடுகின்றது!

அதாவது, இறைவன் ஐயாறப்பர், ஐந்து நதிகள் ஒன்று கூடும் படித்துறையில் நீராடி, தனது ஜடாமுடி காய வேண்டும் என்பதற்காக, அதனை விரித்துப் போட்டிருப்பதால் அதனை பக்தர்கள் மிதித்து விடக் கூடாது என்னும் தாத்பர்யம் அங்கே கடைப்பிடிக்கப்படுவதால், கருவறைப் பிரகாரத்தை முழுவதும் சுற்றாமல் பாதியிலேயே திரும்பி வரும் வகையில் சில ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள்.

தருமபுர ஆதீனத்தின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் ஆலயத்தின் உள்ளே இன்னொரு பகுதியில் அம்மனின் சன்னதி, தனிக் கோவிலாகவே அமைந்திருப்பது மிகச் சிறப்பான அம்சம்!



# அருள் மழை பொழியும் ஆனந்த தீபாவளி

~ சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்.



அன்பார்ந்த சத் வித்யா வாசகர்களுக்கும், இறைத் திருப்புகழ் பரப்பும் சத் வித்யா மதிப்புமிகு நிர்வாகப் பெருமக்கள், ஆசிரியர் மற்றும் ஆசிரியக் குழுவினர் உள்ளிட்ட அனைவருக்கும், என் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள். 'ஐப்பசி அடை மழை, கார்த்திகை கடு மழை' என்பார்கள். பெருமாளுக்கு உகந்த புரட்டாசி மாதத்தில், 'பொன்னுருக காய்ந்து மண் உருக மழை பொழியும்' என்பார்கள். இப்படி ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொரு சிறப்புகள் உண்டு.

ஐப்பசி மாதத்தில் அடை மழை என்றாலும் கூட, தீபாவளிப் பண்டிகை மிகுந்த உற்சாகமுடன் கொண்டாடப் பெறும் மிக முக்கியமான பண்டிகை ஆகும்.

காடு மேடெல்லாம் சுற்றி, கடும் உழைப்பைச் சிந்தி பொருளீட்டும் மனிதன், வருடத்தில் ஓர் நாள் தன் சொந்த மண்ணில், சொந்த பந்தங்கள், பால்ய சிநேகிதர்களுடன் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவது, அவனுக்கு ஆத்ம சந்தோஷம்!

வெளியூர்களில், வெளிமாநிலங்களில், வெளிநாடுகளில் வேலை பார்ப்போர், வருடத்திற்கு ஒரு முறை, தன் தாய் மடியில் கொஞ்சம் இளைப்பாற, கவலைகளை மறந்து தன் அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, மாமா, அத்தை, அண்ணன், அண்ணி, அக்கா, தங்கை, தம்பி, வீட்டில் பணிபுரியும் வேலை ஆட்கள், தன் நிறுவனக் கடைகளில் பணிபுரியும் வேலை ஆட்கள், உள்ளூர் பிரபலங்கள் முதல் உற்ற நண்பர்கள் வரை எல்லோரையும் பார்த்துப் பரவசம் அடையும் சந்தோஷம், அப்பப்பா..... என்ன ஒரு ஆனந்தம்!

ஒவ்வொரு ஆண்டும் ஊருக்கு வரும் போதும், ஊரும் மாறிவிடுகிறது. ஆனால் மாறாதது அன்பான உறவுகளும், உயர்ந்த நட்பும் என்பதில் அவ்வளவு சந்தோஷம். "எலே எப்பலே வந்த"? என அக்கறையாக விசாரிக்கும் குப்பு சாமி தாத்தா.....

'போன வருஷம் தீபாவளிக்கு தம்பி வந்திச்சி இந்த தீபாவளிக்கு வராம இருந்திடுவியோன்னு ரொம்ப கவலையா இருந்துச்சு. முத்துமாரி ஆத்தா அருளால நீ வந்துட்டே. நீ ஊருக்கு போறதுக்குள்ள என்

வீட்டுக்கும் ஒரு எட்டு வந்துட்டு போ அப்பு' என்றாள் சிவகாமி ஆச்சி.


'அதுக்கென்ன ஆத்தா, வந்துட்டா போச்சு. அரிசி முறுக்குகள ஆசையா கொடுப்பீங்க, கண்டிப்பா வரேன் ஆத்தா' என்று புன்னகைத்தபடி கடைக்குச் செல்வதும்.

பல ஆயிரம் கனவுகளுடன் வெளியூர்களில் வேலை பார்த்து, சில ஆயிரங்களுடன் தீபாவளி கொண்டாட ஊருக்கு வரும் உழைப்பின் இலட்சியப் பறவைகளை நாம் பார்த்து இருக்கின்றோம். அவர்கள் மீது இனம்புரியாத சந்தோஷம் கலந்த மரியாதை கொடுத்து இருக்கின்றோம்.

எத்துறையாக இருந்தாலும், அத்துறையில் முத்திரை பதித்து, சின்னத்திரை மற்றும் பெரிய திரைகளில் தடம் பதித்து ஒரு சாதனையாளனாக இரயிலில் ஊருக்கு வரும்போது, மனதில் ஆயிரம் மத்தாப்புகள் ஒளிரும்!

இதோ நாகர்கோவிலைத் தொடப் போகிறது. இன்னும் சற்று நேரத்தில் பசுமை படர்ந்த மலை அருவிகள், வயல் வெளிகள், தாமரைத் தடாகங்கள், ஆன்மீக அருள் சிந்தும் திருக்கோயில்கள் நம்மை ஆரத்தி எடுத்து இனிதே வரவேற்கப் போகிறது.

என்ன ஒரு ஆனந்தம்! வருடத்திற்கு ஒருமுறை தரும் பேரானந்தம் தீபாவளி, இனிப்புகளாய் இதமூட்டும்; இனிமை கூட்டும்; இதோ ரயிலில் இருந்து நாகர்கோவில் மண்ணைத் தொட்டதும், பெற்ற தாயே முத்தமழை சிந்தி, என் தங்கமே என அன்புடன் அரவணைத்து வரவேற்கும் உன்னத உணர்வைப் பெறலாம்.
ஊருக்குச் செல்ல காசு இல்லாமல், வேலை பார்க்கும் இடங்களிலேயே வேதனையுடன் இருந்துவிடும் இளைஞர்களும் உண்டு. இறைவா எல்லாரும் எல்லாமும் பெற அருள்வாய் அப்போதுதான் அது ஆனந்த தீபாவளி!


SWASASUGAM SYRUP

For Clearing Respiratory Tract

Call: 88702 88701

# ஆன்மீக கேள்விகளும் அர்த்தமுள்ள பதில்களும்

~ ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

**பூஜிக்கப்பட்டவரே, தன்னை பூஜித்தவருக்கு பூஜைகள் செய்துள்ள சம்பவமென்ன?**

நான்முகன் பிரம்மதேவன், வால்மீகி முனிவரின் அருமை, பெருமைகளை உணர்ந்து, அவரைச் சந்திக்க விரும்பினார்.

அதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கிய படைப்புக் கடவுள், அந்த முனிவரின் ஆசிரமத்திற்குச் சென்றார். தன் இல்லம் வந்த அதிதியை பலமாக உபசரித்து மகிழ்ந்த வால்மீகி, அவரை அமர்த்தி பூஜையும் செய்தார்.

இந்த பூஜையை மனமார ஏற்றுக் கொண்ட பிரம்மா, எதிர்பாராத வண்ணம் எழுந்து, வால்மீகி முனிவரை அங்குள்ள ஆசனத்தில் அமர்த்தி,

"முனிபுங்கவரே! தாங்கள் கொண்ட இராமபக்தி என்னுள்ளத்தை மிகவும் கவர்ந்துவிட்டது. அதற்காக தங்களை பூஜிக்க அனுமதி தரவும்" என அன்புடன் கேட்டுக் கொள்ளவே அந்த முனிவரும் இசைந்தார். இப்படி தனக்கு பூஜை செய்தவருக்கு பதில் மரியாதை செய்து ராம பக்தியை உலகுணரச் செய்தார் பிரம்மதேவன்!

இதன் தொடர்பான சமஸ்கிருத இலோகமிது.

"வால்மீகயே மஹர்ஷயே ஸந்நிதேச ஆஸநம் தத:' ப்ரஹ் மணா ஸமநுஜ்ஜாத: ஸோப்யுபாவிசதாஸநே"

**புண்ணிய நதிகளில் நீராட உகந்த தினங்கள் எவை?**

கங்கை, காவேரி போன்ற புண்ணிய நதிகள், ஆலயத் தீர்த்தங்கள், சமுத்திரக் கரைகள் இவற்றில் கிரகண நேரங்கள், சனி பிரதோஷம், துவாதசி திதி, அமாவாசை திதி, பௌர்ணமி, ஏகாதசி, மகர சங்கராந்தி, ஆடிமாதம், ஆவணி மூலம், தீபாவளி, மகா நவமி, யுகாதி, கேதார கௌரி விரத தினம், விநாயகர் சதுர்த்தி, கந்தஷஷ்டி விரத நாட்கள், மகா சிவராத்திரி, கோகுலாஷ்டமி, கார்த்திகை மாத மகம் ஆகிய நாட்களில் நீராட இம்மை, மறுமையில் ஆனந்த வாழ்வு நிச்சயம் என்பதும் பிறப்பற்ற முக்தி கிட்டும் என்பதும் ஆன்றோர் வாக்கு.

**அது என்ன சங்கடஹர சதுர்த்தி?**

கஷ்டத்தைக் குறிப்பது சங்கடம் எனும் சொல். ஹர என்றால் நீக்குவது. அதுவே சங்கடஹரசதுர்த்தி.

இந்த நன்னாளில் கணபதி விரதமிருந்து அவரை வழிபட தீராத நோய், கடன், திருமணத்தடை, வேலையின்மை, மகப்பேறின்மை, எதிரிகள் தொல்லை ஆகிய அனைத்தும் அழிந்து வாழ்வில் நற்பலன் கிட்டும்.

**கருடபுராணம் சொல்வது என்ன?**

மனிதன் மாண்ட பிறகு அவனுடைய உடலிலிருந்து பிரிந்து சென்ற உயிர் எங்கெல்லாம் போகும், எப்படிப் போகும் என்பதை விளக்குவதோடு, மனிதனின் பாவ, புண்ணியத்திற்கு ஏற்ப கிடைப்பவைகளையும், அதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**நிவேதனம் (நைவேத்தியம்) என்பதற்கு பொருளென்ன?**

'நிவேதயாமி" என்றால் அறிவிக்கிறேன் என்று அர்த்தம்.

"நான் உட்கொள்ளும் இந்த உணவு உன் கிருபையால் எனக்குக் கிடைத்துள்ளது" என்ற நன்றியைக் காட்டவே நைவேத்தியம் இறைவனுக்குச் செய்யப்படுகிறது.

**மன அமைதி பெற வழியுள்ளதா?**

பகவான் கிருஷ்ணர் உபதேசித்த பகவத் கீதையைப் படிக்க, நிச்சயம் அந்த அமைதி கிடைக்கும்.

கீதோபதேசத்தில் கண்ணனே இப்படிச் சொல்கிறார்: "நிலையில்லாததும், சுகமற்றதுமான இப்பூவுலக வாழ்க்கையில், நீ, அமைதி பெற என்னை பூஜிப்பாயாக" என. (ஆநித்யமஸுகம் லோகமிமம் ப்ராய்ய பஜஸ்வ மாம்" - கீதை வாக்கு) எனவே, இறை பூஜை என்றுமே மனிதனுக்கு நிம்மதியை அளிக்கும்.

**ஸ்ரீமந் நாராயணன் பற்றி வைணவம் என்ன கூறுகிறது?**

நாராயணனே நமக்குப் பறை தருவான் என்கிறது திருப்பாவை.

"சிலையினால் இலங்கை செற்ற தேவனே தேவனாவான்" என்று உரைப்பது திருமாலை.

"கண்ணனல்லால் தெய்வமில்லை கருத்த மனம் ஒன்றும் வேண்டாம்" என அறுதியிட்டு சொல்வது

திருவாய்மொழி.
“முற்ற உலகெல்லாம் நீயேயாகி” என்று பெரியாழ்வார் திருமொழி மூலம் அறிய முடிகிறது. இப்படிப் பல உள்ளன.

## தானத்தை வித்தியாசமாக செய்த மகான் யார்?

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் சீடர்களில் ஒருவராக விளங்கியவர் மகான் அத்யாச்சிரமி பாலசுந்தர சுவாமிகள்.
இம்மகானைத் தேடி வரும் நபர்களில் வறியவர்களோடு பல சன்னியாசிகளும் அடக்கம். அவர்களுக்கெல்லாம் தன் உள்ளங்கையில் ரூபாய் நோட்டுகளை வைத்துக் கொண்டு ”எடுத்துக் கொள்ளுங்கள்” என்பார் சுவாமிகள்.
அவரை அடிக்கடி சந்திக்கும் வாரியார் சுவாமி அவர்கள், “நீங்களே, எடுத்துக் கொடுக்காமல் இது என்ன பழக்கம்?” என ஆவலோடு கேட்டார்.
”கொடுக்கின்ற கை மேலே இருக்க, அதனை பெறுகின்ற கை கீழே இருக்க வேண்டும். அதனால் இப்படிச் செய்கிறேன்” என பதில் வந்தது.
“அது சரி! தாங்கள் அதை கடைப்பிடிக்கவில்லையே?” அடுத்த கேள்வி இப்படிப் பிறந்தது.
புன்முறுவல் பூத்து மகான் விளக்கம் சொன்னார் இப்படி
“என்னிடம் வருபவர்களில் ஏழைகள், பக்தர்கள் தவிர பல ஆலயங்கள் சென்று தரிசித்தும், தீர்த்தங்களில் நீராடியும், பல ஜெபதபங்கள் புரிந்தும் புண்ணியம் பெற்ற இறைடியவர்கள் வருகிறார்கள். அவர்கள் என் கையில் உள்ள ரூபாயை எடுக்கையில் தாங்கள் பெற்ற அருளைத் தருகிறார்கள். அதனால் அருளைத் தரும் அவர்கள் கை மேல்நோக்கியிருக்க, பெறும் காணிக்கையாக நான் தரும் நிலையற்ற பொருளை தாழ்வாக என் கையில் வைத்துள்ளேன்”
இதனைக் கேட்டு மெய்சிலிர்த்துப் போனார் அருள்மிகு கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்கள்.

## புத்தபிரான் பற்றிய ஒரு சம்பவம் கூறவேண்டும்?

கௌதம புத்தரை வணங்கச் சென்ற ஒருவன் தன் கை நிறைய மலர்களை வைத்திருந்தான். அவனைப் பார்த்த புத்தர் “மலரைக் கீழே போடு” என ஆக்ஞையிட்டார். ஆனால் அவன் திகைத்தான்.
“என்ன இப்படிச் சொல்கிறாரே?” என
மீண்டும் சிரித்தவாறே, அம்மகான் சொன்னார்.
“அவைகளை கீழே போடு” என்று
உடனே அவன் கீழ்ப்படிந்து தன் கைகளில் உள்ள மலர்களை பூமியில் போட்டு விட்டான்.
இப்போதும் புத்தர் சிரிப்புடன் “கீழே போடு” என்று கூறினார்.
குழப்பமடைந்த வந்தவன், “இன்னும் எதை கீழே போட வேண்டும் ஐயனே?” எனக் கேட்டான்.
புத்தர் அருளினார் இப்படி அவனுக்கு,
“உன்னைக் கீழே போடச் சொன்னது பூக்களை அல்ல; அவற்றை எது கொண்டு வந்தோ அதைத்தான். புரிந்ததா?”
வந்தவன் தெளிவு பெற்றான்.

## சிவனின் பல பெயர்களில் ஒன்றான திரிபுராந்தகர் பெயர்க் காரணமென்ன?

திரி + புரம் + அந்தகர் என்பது இப்படி பொருள்படும். மூன்று, பக்கம், அழித்தவரென.
நெடுநகர் புரங்கள் மூன்றையும் சிதைத்தவன் என்பார் திருஞானசம்பந்தர். சிவபிரான் திரிபுர அரக்கர்களை அழித்தவனாயிற்றே!
இந்த திரிபுராந்தகர் குறிப்பாக நெல்லை மாவட்ட பாளையங்கோட்டையில் அன்னை கோமதியுடனும், திருவள்ளுர் மாவட்ட கூவம் தலத்தில் அன்னை திரிபுரசுந்தரியுடனும் காட்சி தருவது அருமை!

## உணவு சாப்பிடுவதற்கு முன்பு சொல்ல வேண்டிய மந்திரமாமே?

நமக்கு ஒவ்வொரு வேளையும் சாப்பாடு அளிக்கும் அன்னபூரணி தேவதையை நன்றியுடன் நினைத்து சொல்ல வேண்டிய மந்திரம் இது.
“அன்னதேவி தேஹியன்னம்
பசூன் புத்ரான்யஸஸ் ஸ்ரீயம்
ஆயுராரோக்யம் ஐஸ்வர்யம்
தேஹி தேவி நமோஸ்துதே”
“அன்னை அன்னபூரணியே! அன்னத்தை எங்களுக்குத் தா! அத்தோடு ஆயுள், ஆரோக்கியம், செல்வம் இவற்றையும் வழங்கு” என்பது இதன் பொருள்.
சாப்பிடும் முன்பு இலை அல்லது தட்டின் அருகே அமர்ந்து இதனைக் கூறவேண்டும்.
உண்டி கொடுத்தோர், உயிர் கொடுப்பவரல்லவா?

# தீபாவளி அன்று பெருமாள் செய்த காரியம்!

~ பிரபு சங்கர்

திருக்குடந்தைத் திருத்தலத்தில் வில்லேந்திய கோலத்தில் உற்சவர் பெருமாள் திகழ்கிறார். அதனாலேயே இவர் சார்ங்கபாணி எனப்படுகிறார். சிலர் இவரை வாய்க்கு சுலபமாக "சாரங்கபாணி" என்று அழைக்கிறார்கள். ஆனால், சாரங்கம் என்றால் மான் என்று பொருள். சாரங்கத்தைக் கையிலேந்தியவர் சிவபெருமான். அதனால் அவர் தான் சாரங்கபாணி. ஆகவே சார்ங்கம் என்ற வில்லேந்திய பெருமாள் சார்ங்கபாணி தான். கோயில் முகப்பிலேயே "சார்ங்கபாணிப் பெருமாள் கோயில்" என்றே பலகையில் எழுதி வைத்திருக்கிறார்கள்.

லட்சுமி நாராயணன், சார்ங்கபாணிப் பெருமாளிடம் ஆழ்ந்த பக்தி கொண்டவன். அர்ச்சாவதாரமாக, அழகுமிகுத்து சயனித்திருக்கும் இந்தப் பெருமாள் கோயிலுக்கு ஒரு ராஜகோபுரம் இல்லையே என்ற ஏக்கம் அவனைப் பெரிதும் வாட்டியது. தானே தனியனாக அந்த முயற்சியை மேற்கொண்டான். பிரம்மச்சாரியான அவன், தன் வாழ்நாள் முழுவதும் இந்தப் பணிக்காகவே அர்ப்பணித்துக் கொண்டான். குடும்ப வாழ்க்கையைப் பற்றி அவன் சிந்தித்துப் பார்த்ததேயில்லை. அவனுடைய நண்பர்களும் உறவினர்களும் "இப்படி கல்யாண சிந்தனையின்றி காலம் பூராவும் இந்த கருட வாகனனுக்காக செலவிட்டாயானால், உன் இறப்புக்குப் பிறகு உனக்கு ஈமக்கடன் செய்ய உனக்கு ஒரு வாரிசு வேண்டாமா? அதற்காகவாவது திருமணம் செய்துகொள்" என்று அவனை வற்புறுத்தினார்கள்.

அவனோ, "எல்லாம் பெருமாள் பார்த்துக் கொள்வார், எனக்கென்ன கவலை?" என்று அவர்களிடம் அலட்சியமாகவும், ஆழ்மனதில் பெருமாள் பக்தியுடனும் உறுதியாகச் சொன்னான். அது மட்டுமல்லாமல், தன் காலத்திலேயே மிகுந்த சிரமத்துடன், சிறிது சிறிதாகப் பொருள் ஈட்டி, பலரிடம் யாசகமும் பெற்று அந்த ராஜகோபுரத்தை முழுமையாகக் கட்டி முடித்து அந்த நிறைவிலேயே மோட்சமும் அடைந்தான்.

இப்போது ஊரார் கையைப் பிசைந்து கொண்டு நின்றார்கள். "இவனுக்கு இறுதிச் சடங்குகளை யார் செய்வது? ஒரே வீம்பாக திருமணமே செய்து கொள்ளாதிருந்து விட்டானே! வாரிசு இல்லாதவனாகி விட்டானே!" என்றெல்லாம் யோசித்து மறுகினார்கள். அன்றிரவு ஆலய அர்ச்சகரின் கனவில் சார்ங்கபாணிப் பெருமாள் தோன்றினார். "என் கையில் தர்ப்பையை வைத்து, பிறகு அதை எடுத்துச் சென்று என் பக்தனான லட்சுமி நாராயணனுக்கு ஈமக்கடன் செய்யுங்கள்" என்றார். பெரிதும் அதிசயித்தபடி ஊராரிடம் தன் கனவைச் சொன்னார் அர்ச்சகர். யாராலும் நம்பவே முடியவில்லை. அதெப்படி பெருமாள் இப்படி ஒரு "காரியம்" செய்வார் என்று அதிசயித்தார்கள். மறுநாள் அர்ச்சகர் தர்ப்பைப் புல்லை எடுத்துக் கொண்டு, சந்தேக பக்தர்களுடன் பெருமாளின்



கருவறைக்குள் போனபோது, அங்கே பெருமாள் ஈர உடையுடன், பூணூலை இடமாக அணிந்து காட்சி கொடுத்ததைப் பார்த்ததும், அனைவருக்கும் வெலவெலத்து விட்டது! என்ன அதிசயம் இது! லட்சுமி நாராயணன்தான் எத்தனை கொடுத்து வைத்தவன்! அனைவரின் கண்களிலும் நீர் வெள்ளமாகப் பெருகியது. பகவான் சொன்னபடியே அவர் திருக்கரத்தில் தர்ப்பையை வைத்த அர்ச்சகர், பிறகு அதை எடுத்துச் சென்று பெருமாள் சார்பாக லட்சுமி நாராயணனுக்கான இறுதிச் சடங்கை முறைப்படி நிறைவேற்றி வைத்தார்.

இந்த சம்பவம் நிகழ்ந்தது ஒரு தீபாவளி தினத்தன்று. இப்போதும் இந்தத் திருத்தலத்தில் பக்தன் லட்சுமி நாராயணனுக்கு, தீபாவளி அமாவாசையன்று சிராத்தத்தை இந்த ஆராவமுதப் பெருமாள் நடத்தி வைக்கிறார். இதில் நெகிழ்ச்சியான இன்னொரு விஷயம் என்னவென்றால், அன்றைய தினம், பெருமாள் அமுது செய்வது அன்றைய சிராத்தத்துக்காகத் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளைத்தான்; வழக்கமான பிரசாதங்களை அல்ல! தன் மீது பக்தி கொண்ட பரம பக்தன் ஒருவனுக்குப் பெருமாள் இவ்வளவு கீழிறங்கி வந்து, அவன் நற்கதி அடைய, காரியம் செய்து வைக்கிறார் என்றால் இந்தக் கருணையை புகழ வார்த்தைகள்தான் ஏது?
இத்தனை சிறப்புகளுடன் கூடியதாகத் திகழும் இந்த ராஜகோபுரம், உயரத்தில் மூன்றாவதாகப் போற்றப்படுகிறது. முதலாவது ஸ்ரீரங்க கோபுரம் - 239.501 அடி உயரம்; இரண்டாவது ஸ்ரீவில்லிப்புத்தூர் - 193.5 அடி; மூன்றாவது இந்த ராஜகோபுரம் - 150 அடி!

வைணவ சம்பிரதாயப்படி ஸ்ரீரங்கத்தை மேல்வீடு என்று சொல்வார்கள். திருக்கண்ணபுரம் திவ்ய தேசத்தைக் கீழ்வீடு என்றும், திருக்குடந்தையை நடுவீடு என்றும் அழைப்பர். பரந்தாமன் தன் அனுகிரகங்களை பக்தர்களுக்குத் தண்ணொளியாக வழங்குகிறான் என்பதால் இந்த மூன்று திருத்தலங்களையும், வாநிலா முற்றம் (ஸ்ரீரங்கம்), நீள்நிலா முற்றம் (திருக்கண்ணபுரம்), தூநிலா முற்றம் (திருக்குடந்தை) என்றும் வழங்குகிறார்கள்.

தூநிலா முற்றமான திருக்குடந்தை சார்ங்கபாணியை பெரியாழ்வார் தம் பாசுரத்தில் நயம்படக் குறிப்பிடுகிறார்:

“தூநிலா முற்றத்தே போந்து விளையாட
வானிலா அம்புலீ! சந்திரா! வா என்று
கோநிலாவக் கொட்டாய் சப்பாணி
குடந்தைக் கிடந்தானே சப்பாணி!”

தாம் இயற்றிய மிகப் பெரிய யாகத்தின் பயனை மும்மூர்த்திகளில் யாருக்கு அளிப்பது என்று முனிவர்களுக்கிடையே யோசனை எழுந்தது. அத்தகைய தகுதியுடையவர் யார் என்பதை அறிந்துவர அவர்கள் தங்கள் பிரதிநிதியாக பிருகு முனிவரை அனுப்பி வைத்தார்கள். அவர் முதலில் சத்தியலோகம் சென்றார், பிரம்மனை சந்திக்க விரும்பிய அவரது விருப்பம் ஈடேறவேயில்லை. காரணம், பிரம்மன் உட்பட யாருமே அவரை மதிக்கவில்லை; வரவேற்கவும் இல்லை. அவரவர் தத்தமது சுகபோகங்களில் திளைத்திருந்தார்கள்; பிருகு என்ற இடையூறை விரும்பவில்லை.

சினம் கொண்ட முனிவர், விருட்டென்று அங்கிருந்து புறப்பட்டார். நேராகக் கயிலாயம் சென்றார். அங்கும் ஏகாந்த நிலையில் இருந்த ஈசன் அவரை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. சினம் கூடியது. மூன்றாவதாக பாற்கடல் சென்றார். அங்கே திருமகள் கால் பிடித்துவிட, சுகமாக சயனித்திருந்த திருமாலும் முனிவரை கவனிக்கவில்லை. ஏற்கெனவே ஏறியிருந்த சினச்சுமை இந்தக் காட்சியைக் கண்டதும் இன்னும் அதிகமாயிற்று. எல்லா கோபத்தையும் சேர்த்து மொத்தமாகத் திருமாலின் மீது பிரயோகித்தார். தன் காலால் திருமாலின் மார்பில் உதைத்தார்.

திடுக்கிட்ட மஹாவிஷ்ணு, பிருகு முனிவரின் கோபத்தை உணர்ந்து அவர் உதைக்கும் அளவுக்கு அவரை சினம் கொள்ள வைத்துவிட்டோமே என்று வருந்தி, அவரது காலைப் பிடித்து, “என்னை உதைத்ததால் தங்கள் பாதம் வலித்திருக்குமே” என்று சொன்னபடி வருடி விட்டார். அவரை கவனிக்காத தன் பிழையைப் பொறுத்தருளும்படி கனிவுடன் கேட்டுக் கொண்டார்.

அந்தக் கனிவால் முனிவர் கூனிக் குறுகிப் போனார். இந்த கருணை சீலனை எவ்வளவு மோசமாக அவமதித்து விட்டோம் என்று பெரிதும் வருந்தினார். கூடவே, இப்படி பொறுமை காத்த இந்த மூர்த்தியே யாகப்பயனைப் பெறத் தகுதியானவர் என்று தேர்வும் செய்தார். அதன்படி வேள்விப் பலன்கள் எல்லாம் திருமாலையே சேர்ந்தன.

ஆனால், திருமகளுக்கு, தன் நாயகன் பிருகு முனிவரை மன்னித்ததோடு, அவர் கால்களையும் இதமாக வருடிவிட்ட செயலும் பெரிய மனத்தாங்கலைக் கொடுத்து விட்டது. அவர் உதைத்த இடம், தான் நிரந்தரமாக உறைவதற்கான திருமார்பு அல்லவா? உடனே முனிவரை சினந்து தண்டிக்காமல், அவரை மன்னித்து, தான் பிழை செய்ததாகவும் ஒப்புக் கொள்கிறாரே! இது மஹாலக்ஷ்மியாகிய தன்னைப் பெரிதும் அவமானப்படுத்துவதாக அல்லவா உள்ளது! இப்படி பிறருக்காகத் தன்னை விட்டுக் கொடுக்கும் இவருடன் எப்படித் தொடர்ந்து வாழ்வது என்று சலித்துக் கொண்ட திருமகள் அவரைப் பிரிந்து பூலோகத்தில் கோல்ஹாப்பூர் என்ற தலத்துக்கு வந்தாள்.

தன் அகங்காரத்தால், நாராயணனையே அவமதித்துவிட்ட தன் இழிசெயலால் பெரிதும் வெட்கமுற்ற பிருகு முனிவர், அதனால் திருமகள், திருமாலை விட்டுப் பிரிந்தது கண்டும் வருத்தமுற்றார். இதற்குப் பிராயச்சித்தமாக, இனிவரும் பிறவியில் தன் மகளாக மஹாலக்ஷ்மி பிறக்க வேண்டும் என்றும், அவளைத் திருமால் மணந்து தனக்கு மருமகனாக உறவு ஏற்பட வேண்டும் என்றும் வரம் பெற கடுந்தவத்தை மேற்கொண்டார்.

தன்னை விட்டுத் திருமகள் பிரிந்ததால் பெரிதும் வாட்டமுற்ற திருமால், பூலோகத்துக்கு, அவளைத் தேடுவதற்காக இறங்கி வந்தார். திருவேங்கடமலையில் ஒரு வேடுவனாக ஸ்ரீநிவாசன் என்ற பெயர்கொண்டு தன் மனதுக்கினியாளை அவர் தேடி வந்தபோது, பத்மாவதியை சந்தித்தார். இந்த பத்மாவதியும் மஹாலக்ஷ்மியின் ஓர் அம்சமே, அவளுடைய முந்தைய பிறவியில், அதாவது, தன் ராமாவதார காலத்தில் அவள் வேதவதியாகத் திகழ்ந்தவள். தன்னை மணக்க விரும்பிய அவளிடம், “இப்பிறவியில் இரு மாதரை சிந்தையாலும் தொடேன்” என்று ராமன் கூறிவிட்டதால், அடுத்த பிறவியிலாவது தன் எண்ணம் ஈடேறுமா என்று ஏக்கம் கொண்டிருந்தாள் வேதவதி. அதனால் அவளே பத்மாவதியாகப் பிறந்து திருமாலுக்காகக் காத்திருக்க, ஸ்ரீநிவாசனாக வந்த அவர், அவள் விருப்பத்தை நிறைவேற்றினார். இதற்கிடையில் நாரதர் மூலமாக மஹாவிஷ்ணு பூமிக்கு வந்ததையும், ஸ்ரீநிவாசராக பத்மாவதியை மணந்து கொண்டதையும் அறிந்த திருமகளின் சினம் இன்னும் அதிகமாயிற்று. உடனே கோல்ஹாப்பூரிலிருந்து புறப்பட்டு சீற்றத்துடன் திருமலைக்கு வந்தாள். மீண்டும் அவளை கோபத்துக்குள்ளாக்கி விட்டோமே என்று வருந்திய பெருமாள், அவள் சினத்துக்கு அஞ்சி அங்கிருந்து கும்பகோணத்துக்கு ஓடோடி வந்தார். அங்கே ஒரு பாதாளக் குகையில் ஒளிந்து கொண்டார். (இப்போதும் குடந்தை சார்ங்கபாணி கோயிலில் பாதாள ஸ்ரீநிவாசன் என்ற பெயரில் பூமிக்கு அடியில் ஒரு சந்நதியில் சேவை சாதிக்கிறார் பெருமாள். சில படிகள் இறங்கிச் சென்றுதான் இவரைத் தரிசிக்க முடியும். பொதுவாக ஏதேனும் விசேஷ நாட்களில்தான் அந்த சந்நதியை தரிசனத்துக்காகத் திறந்து வைக்கிறார்கள்.

தேடிவந்த நாயகன் காணாமல் ஒளியவே, துயரம் கொண்டாள் தேவி. இனி அவனைக் காணவேண்டுமானால் அது கடுந்தவத்தால் மட்டுமே இயலும் என்பதை உணர்ந்து, அவ்வாறே தவம் மேற்கொண்டாள். அதுவும் எப்படி? ஒரு தடாகத்தில், ஒரு தாமரை மலரில் சிறு குழந்தையாக உருமாறி! அப்போது அங்கே குடிலமைத்து இறைப்பணி ஆற்றிவந்த பிருகு முனிவர் அந்தக் குழந்தையைப் பார்த்து, பெருமகிழ்வு கொண்டு தன் மகளாக எடுத்து வளர்க்க ஆரம்பித்தார். தாமரையில் தோன்றியவள் என்பதால் கோமளவல்லி என்ற பெயருடன் அவள் பொலிவுடன் திகழ்ந்தாள்.
இந்த சம்பவங்களை இப்படியே விட்டுவிட்டு, மீண்டும் ராமாவதார காலத்துக்குச் செல்வோம். பட்டாபிராமனாக அயோத்தியே அகம் மகிழ முடிசூட்டிக் கொண்ட ராமன், தன்னுடைய இந்த சந்தோஷத்துக்குக் காரணமான அனைவருக்கும் அன்பளிப்புகள் வழங்கி மகிழ்ந்தான். அந்த வகையில் விபீஷணனுக்கு தன் இக்ஷ்வாகு வம்சத்தவரால் வழிவழியாக வழிபடப்பட்டு வந்த ஆராதன விக்ரகத்தை அளித்தான். ப்ரணவாக்ருதி மற்றும் வைதிக விமானங்களைக் கொண்ட அந்த அர்ச்சாமூர்த்தியை, விபீஷணன் இலங்கைக்குப் பேருவகையுடன் கொண்டு சென்றான். ஆனால், வழியில் ஸ்ரீரங்கத்தில் ப்ரணவாக்ருதி விமானத்துடன் அரங்கன் அங்கேயே தான் தங்கிவிடும் விருப்பத்தை விபீஷணனுக்கு தெரிவித்து, தன்னை அவன் ஆண்டுக்கு ஒருமுறை வந்து வழிபட்டுச் செல்லலாம் என்றும் தெரிவித்து விட்டார். விபீஷணன் திகைத்து நிற்க, வைதிக விமானத்துடன் தான் குடந்தையில் அர்ச்சாவதார ரூபியாக சேவை சாதிக்கவும் திருமகளை அங்கே மணம் புரிய விரும்புவதாகவும் தெரிவித்தார். அதேபோல குடந்தையில், வில்லேந்திய கோலத்தில் கோயில் கொண்ட அவர், கோமளவல்லியாக அவதரித்திருந்த மஹாலக்ஷ்மியைத் திருமணம் செய்துகொண்டு அனைவரது விருப்பங்களையும் பூர்த்தி செய்தார். அப்படி மகிழ்ந்தவர்களில் பிருகு முனிவர் முக்கியமானவர். தான் அவமதித்ததையும் பொருட்படுத்தாமல், தன் பாதங்களைத் தன் திருக்கரங்களால் வருடி “தான்நாண நன்னயம் செய்த” பெருமாளே தனக்கு மருமகனாகவும், தன்மீது கோபமுற்ற திருமகளே தனக்கு மகளாகவும் வரிக்கப்பட்ட தெய்வானுக்ரகத்துக்கு உள்ளம் நெகிழ நன்றி சொன்னார் அவர்.

கோமளவல்லியை மணம் புரிந்து கொண்டதாலேயே இத்தலம் கல்யாணபுரி என்றும் வழங்கப்பட்டது. கோமளவல்லி அவதரித்த ஹேம புஷ்கரணியில் இன்றளவும் நடத்தப்படும் மாசிமாத

தெப்போற்சவம் மிகவும் பிரபலமானது.

ஸ்ரீரங்கம், பெருமாளின் பெருமைக்குரிய க்ஷேத்திரம் என்றால், திருக்குடந்தை அவரது பேரழகைப் போற்றும் திருத்தலம் எனலாம். காவிரியும் கொள்ளிடமும் ஸ்ரீரங்கனை அரவணைத்துச் செல்வதுபோல, குடந்தை சார்ங்கராஜாவை காவிரியும் அரசலாறும் தழுவிச் செல்கின்றன.

ஸ்ரீரங்கம் துவங்கி அனைத்து திவ்ய தேசங்களையும் மங்களாசாசனம் செய்த நாலாயிரம் பிரபந்தங்களையும் ஒருங்கே தொகுக்க குடந்தை ஆராவமுதன் உதவியிருக்கிறார்.



ஒன்பதாம் நூற்றாண்டு வாக்கில், காட்டுமன்னார் கோயில் என்ற தலத்தில் அவதரித்த நாதமுனிகள், ஒருமுறை திருக்குடந்தை வந்து பெருமாளைத் தரிசனம் செய்தார். அப்போது சில பக்தர்கள், "குழலின் மலியச் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்தும் மழலைதீர வல்லார் காமர்மானேய் நோக்கியர்க்கே" என்று பெருமாள் புகழ்பாடிச் செல்வதைக் கேட்டார். "ஆயிரம் பாடல்கள் இருக்க அவற்றில் தாம் பாடுவது இந்தப் பத்துப் பாடல்களே" என்று அவர்கள் ஏக்கமாகச் சொல்லக் கேட்டு வியந்தார். பெருமாள் புகழை ஆயிரம் பாடல்கள் வர்ணிக்கின்றனவா என்று ஆனந்தமாகத் திகைத்தார். ஆனால், அவர்களோ, "ஓராயிரம் அல்ல; நான்காயிரம் பாசுரங்கள் உள்ளன" என்று சொன்னபோது அவர் மயங்காத குறைதான். "அந்த நாலாயிரத்தையும் தொகுக்க வேண்டுமே!" என்று பரிதவித்தார். அந்தப் பெரும்பணியை எப்படி நிறைவேற்றுவது என்று புரியாமல் திகைத்தார்.

அன்றிரவு அவர் குழப்பத்துடன் கண்ணயர்ந்தபோது, அவர் கனவில் பெருமாள் தோன்றினார். ஆழ்வார் திருநகரி திருத்தலத்துக்குச் செல்லுமாறும் அங்கே அந்தப் பிரபந்தங்களைத் தொகுக்கும் வழிமுறை கிடைக்குமென்றும் அறிவுறுத்தினார். அதன்படியே நாதமுனிகள், ஆழ்வார் திருநகரி சென்றார். அங்கே நம்மாழ்வாரின் சீடரான மதுரகவியாழ்வாரின் அறிவுரைப்படி, "கண்ணிநுண் சிறுத்தாம்பினால்" என்று தொடங்கும் பாடல்களை 12,000 தடவை பாடி நம்மாழ்வாரின் திவ்ய தரிசனம் கிடைக்கப் பெற்றார். அதோடு அங்கே மறைந்திருந்த நாலாயிரம் பாசுரங்களையும் ஒரு திரை மறைவிலிருந்து நம்மாழ்வார் சொல்லச் சொல்ல எழுதிக்கொண்டு தொகுத்து அளிக்கும் அரும் பேறும் பெற்றார். இதைக் குறிக்கும் வகையில், "தாளம் வழங்கி தமிழ்மறை இன்னிசை தந்த வள்ளல்" என்று ஸ்ரீவேதாந்த தேசிகன், நாதமுனிகளைக் கொண்டாடுகிறார். இந்த காலகட்டத்திற்குப் பிறகுதான், அபிநயித்தபடி பாசுரங்களைப் பாடும் "அரையர் சேவை" என்ற வழிபாடு தோன்றியது. இதனாலேயே பெருமாள் ஆராவமுதாழ்வான் என்று போற்றப்படலானார்.

இங்கு மூலவரான ஆராவமுதனை, மேலோட்டமாகப் பார்த்தால் சயன கோலத்தில் இருப்பதுபோலத் தெரியும். ஆனால், சற்று உற்றுப் பார்க்கும்போது, எதற்காகவோ எழுந்திருக்க முயற்சிக்கும் தோரணையில் சற்றே எழுந்த நிலையில் அவர் திகழ்வதைக் காண முடியும். இந்தவகை சயனத்தால் இவர் "உத்தானசாயீ" என்றும் அழைக்கப்படுகிறார். சுவாமி எழுந்திருக்க முயற்சிப்பானேன்?

இதற்கு ஒரு சுவையான பின்னணி உள்ளது: இந்தத் தலத்துக்குப் பெருமாளை தரிசிக்க வந்தார் திருமழிசையாழ்வார். பெருமாள் பள்ளி கொண்டிருப்பதைப் பார்த்த அவருக்கு, அவர் ஓய்வெடுப்பது போலவே தோன்றியிருக்கிறது. உடனே,

"நடந்த கால்கள் நொந்தவோ? நடுங்கு ஞாலமேனமாய்
இடந்த மெய்க்குலுங்கவோ? இலங்குமால் வரைச்சுரம்
கடந்தகால் பரந்த காவிரிக்கரை குடந்தையுள்
கிடந்தவாறு எழுந்திருந்து பேசுவாழி கேசனே!"

- என்று அக்கறையுடன் கேட்கிறார். "பெருமாளே, ஏன் படுத்திருக்கிறீர்கள்? வராஹ அவதாரம் மேற்கொண்டு, பாதாள லோகம் சென்று பூமித்தாயை மீட்டுத் தாங்கி வந்தீர்களே, அந்தக் களைப்பா? ராமாவதாரம் எடுத்து, காடு, மலை, மேடுகளிலெல்லாம் நடந்து, நடந்து கால்கள் நோவுற்றனவோ என் ஐயனே, அதனால் தான் சயனித்திருக்கிறீர்களா? எழுந்திருங்கள் சுவாமி, பதில் கூறுங்கள்" என்று மிகுந்த பரிவுடன் கேட்கிறார். ஆனால், அவருக்கு பதிலளிக்க பெருமாள் எழுந்திருக்க யத்தனித்தபோது, ஆழ்வாருக்கு மனசு பதறிப் போகிறது. "அடடா, ஓய்வாக சயனித்திருக்கும் என் தலைவனை எழுப்பி விட்டேனே" என்று தன்னையே கடிந்து கொள்கிறார். உடனே, "வாழி கேசனே, அப்படியே படுத்திரும்" என்று சொல்லி, அவரை மீண்டும் ஓய்வு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறார்.

இப்படி ஆழ்வாருக்கு பதில் சொல்ல எழ முனைந்த திருக்கோலம்தான் இப்போது நாம் தரிசிப்பது. இப்படி எழச்சொன்ன ஆழ்வாருக்கு "திருமழிசைப்பிரான்" எனத் திருநாமம் ஏற்பட்டது.
இந்தக் கோயிலில் கர்ப்பக் கிரகம் வித்தியாசமானது. ஒரே கல்லால் ஆனது. அதுவும் ஒரு தேர் வடிவத்தில். யானையும், குதிரையும் இழுத்துச் செல்வது போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. கருவறைக்குள் பெருமாளை தரிசிக்க, ஆடி மாதம் முதல் மார்கழி வரை தட்சிணாயன வாசல் வழியாகத்தான் செல்ல வேண்டும். இது தட்சிணாயன தேவதையின் வேண்டுகோள் என்றும் அதனை மதிக்கும் வகையில் ஆராவமுதன் இப்படி ஓர் ஏற்பாட்டைச் செய்தான் என்றும் சொல்கிறார்கள். அதேபோல தை முதல் ஆனி முடிய உத்தராயண வாசல் வழியாகச் சென்றுதான் மூலவரை தரிசிக்க முடியும். கர்ப்பக்கிரகத்துக்கு இரு புறமும் உள்ள இந்த இரு வாசல்கள் வழியாகத்தான் பெருமாள் அந்தந்த மாதங்களில் எழுந்தருள்வார்.

இந்தக் கருவறை அமைப்புக்கு ஏற்றாற் போல திருமங்கையாழ்வார் ஒரு சிறப்பு செய்திருக்கிறார். இது வேறு எந்த திவ்ய தேசத்துக்கும் இல்லாத பெருமை என்றே சொல்லலாம். அதாவது, தேர் வடிவில் அமைத்த திருவெழுக்கூற்றிருக்கை என்ற பிரபந்தத்தால் அவர் பெருமாளை மங்களாசாசனம் செய்திருக்கிறார்.
இந்தக் கோயிலில் சித்திரைத் தேர் பெரும் புகழ் பெற்றது. 1936ம் ஆண்டுக்குப் பிறகு ஓடாதிருந்த இந்தத் தேரை, அதற்குப் பிறகு ஐம்பது வருடங்கள் கழித்து, ஓடச்செய்த பெருமை அப்போதைய ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் ஸ்ரீவேதாந்த ராமானுஜ மஹாதேசிகனையே சேரும்.

கோயிலில் தனி சந்நதியில் கொலுவிருக்கிறாள் கோமளவல்லித் தாயார். இவர் படிதாண்டா பத்தினி. பிருகு முனிவரால் அவமானப்படுத்தப்பட்ட மஹாவிஷ்ணு மீது கோபம் கொண்டு அவரைப் பிரிந்து வர, அவரும் பூமிக்கு வந்து பத்மாவதித் தாயாரை ஸ்ரீநிவாசனாக மணம் புரிந்து, தன் பார்வைக்குப் படாமல் ஒளிந்து கொண்டு, பிறகு தான் கோமளவல்லியாகி அவர் கைத்தலம் பற்றிய அனுபவங்களால், பெருமாளுடன் இணைந்து எங்கும் உலாவர பிரியப்படவில்லையோ! அதனாலேயே சந்நதிக்குள்ளேயே தங்கியிருக்கிறாரோ!

ஒரு பக்தன், முகலாயர்களிடமிருந்து இத் திருக்கோயிலையே காத்திருக்கிறார். அவர்கள் இந்தக் கோயிலைக் கொள்ளையிட்டு அழிக்க வருகிறார்கள் என்று தெரிந்தது. உடனே, பெரிய வைக்கோல் போரால் கோயிலை மூடி வைத்தார். அவர்கள் வந்தபோது அது மாடு கட்டும் இடம் என்று சொல்லி, நம்ப வைத்துத் திருப்பி அனுப்பினார். அவர் பெயர் நெய்வாசல் உடையார். இன்றும் நெய்வாசல் உடையார் வம்சத்தினருக்கு, கோயில் உரிய மரியாதையை அளித்து வருகிறது. இந்த ஆராவமுதனை நம்மாழ்வார் நெக்குருகிப் பாடுவது நம்மையும் நெகிழச் செய்யும்:
ஆராஅமுதே அடியேன் உடலம் நின்பால் அன்பாயே
நீராய் அலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே
சீரார் செந்நெல் கவரிவீசும் செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய் கண்டேன் எம்மானே!
- திகட்டாத அமுதம் போன்றவனே, நாளெல்லாம் உன்னை வணங்கினாலும் மனசுக்கு நிறைவு ஏற்படாது. உன்மீது நான் கொண்ட பக்திக்கு நீ காட்டும் அருள், என்னை நீர்போலக் கரையச் செய்கிறது. நெடுமாலே, நீர்வளம் மிக்க இந்தக் குடந்தையில் செந்நெல் கதிர்கள் உனக்கு சாமரம் வீசுகின்றனவோ! பள்ளி கொண்ட எம்பெருமானே உன் பேரழகால் மயங்கி மகிழ்ந்து நிற்கிறேன்.
ஆராவமுதப் பெருமாள் என்ற மூலவராகவும், சார்ங்கபாணிப் பெருமாள் என்ற உற்சவராகவும் கும்பகோணம் நகரின் மையப் பகுதியில் கோலோச்சிக் கொண்டிருக்கிறார், ஆரா அமுதன்.

# குரு பெயர்ச்சி பலன்கள் 2021 – 2022

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

கிரகங்களிலேயே பூரண சுபர் மற்றும் சாத்வீக கோளான குரு பகவான், நவம்பர் 20, 2021, சனிக்கிழமை அன்று இரவு 11:31 இந்திய நேரப்படி, மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார். எந்த ராசிக்கு எப்படிப்பட்ட பலன்களை குரு பகவான் வழங்கப்போகிறார் என்பதைப் பார்ப்போம்.



## மேஷம்

உங்கள் உடன் பிறந்தவர்கள், சக ஊழியர்கள் மற்றும் அயலவர்களுடன் நல்ல உறவு நிலை இருக்கும். பொழுதுபோக்குகள் மற்றும் சுற்றுலா மீதான ஆர்வம் அதிகரித்துக் காணப்படும். உங்கள் மூத்த உடன்பிறப்புகள், மருமகன் மற்றும் மருமகளுடனான உங்கள் உறவு சீராக இருக்கும்.. காதலர்களுக்கு இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். கணவன் மனைவிக்கு இடையே நல்லுறவு கூடும். இந்த குருப்பெயர்ச்சியில் தன நிலை சீராகவும், ஏற்றம் மிகுந்தும் காணப்படும். அதிக அல்லது தேவையற்ற செலவுகள் இந்த குருப்பெயர்ச்சியில் இருக்காது. வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களும் கணிசமான வருமானம் காண்பார்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்குப் பணியில் உயர்வு ஏற்படும். உங்கள் கடின உழைப்பிற்கு மேலதிகாரிகளின் அங்கீகாரமும் பாராட்டும் கிடைக்கும். பணி செய்யும் இடத்தில் புதிய பொறுப்புகள் தேடிவரும். தொழிலில் போட்டியாளர்கள் அதிகம் இருந்தாலும் அவர்களை எல்லாம் எதிர் கொண்டு நீங்கள் வெற்றி காண்பீர்கள். ஊடகத்துறை, பொறியியல் துறை மற்றும் மருத்துவத் துறையில் இருப்பவர்கள் சிறந்த வகையில் வருமானம் ஈட்டுவார்கள். முதுகலைப் பட்டம் படிக்கும் மாணவர்கள் சிறந்த முறையில் வெற்றி காண்பார்கள்.



## ரிஷபம்

குடும்பத்தில் அமைதியும் நல்லிணக்கமும் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். நண்பர்களிடம் நல்ல சுமுகமான உறவு நிலை காணப்படும். வீட்டில் திருமணம் மற்றும் வளைகாப்பு போன்ற விருந்து, விசேஷங்கள் நடக்கும் வாய்ப்புகள் உள்ளது. தாய் மற்றும் தந்தையின் நலனில் அக்கறை தேவை. உங்கள் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனமுடன் இருக்க வேண்டும். சுய ஒழுக்க வாழ்வைப் பின்பற்றுவதன் மூலம், உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்திக் கொள்ளலாம். திருமணமான தம்பதிகளுக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்படும் வாய்ப்புகள் உள்ளது. குறிப்பாக, பணம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகலாம். வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நன்மை பயக்கும். இந்த குருபெயர்ச்சியில் உங்கள் நிதிநிலை மேம்படும். பழைய கடன்கள் இருந்தால் அவற்றை அடைத்து முடிப்பீர்கள். நீங்கள் கடினமாக உழைப்பதன் மூலமும், சக பணியாளர்களிடம் நல்லுறவு பேணுவதன் மூலமும், பணியிடத்தில் நல்ல பெயரும் புகழும் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில் செய்பவர்கள் தங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள புதிய தொழிலைத் தொடங்குவது ஏற்றத்தைக் கொடுக்கும். வியாபாரத்தில் தன வரவு அதிகரிக்கும். பள்ளிக் கல்வி படிக்கும் மாணவர்கள் கவனச் சிதறலுக்கு ஆட்படுவார்கள். படிப்பில் கவனம் தேவை.



## மிதுனம்

குடும்ப உறுப்பினர்களுக்கிடையே நல்லுறவு நீடிக்கும். நண்பர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள். நல்ல மனிதர்களின் நட்பு மூலம் ஆதாயம் உண்டு. குழந்தைகளுடனான உறவு வலுப்படும். தாயார் உடல் நலனில் அக்கறை தேவை. உத்தியோகத்தில் பணிச்சுமை காரணமாக மனச்சோர்வு மற்றும் தூக்கமின்மை பிரச்சனைகள் ஏற்படலாம். வயதான பெண்களுக்கு மூட்டு சம்பந்தப்பட்ட பிரச்சனை ஏற்படும். எனவே மருத்துவ ஆலோசனை பெறுவது நன்மை பயக்கும். காதல் உறவில் உள்ளவர்கள் வார்த்தைகளில் கவனமாக இருக்க வேண்டும். திருமணத்திற்குக் காத்திருக்கும் உங்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்கப் பெறுவீர்கள். தம்பதிகளுக்கு இடையே நல்லுறவு காணப்படும். இந்த குருப் பெயர்ச்சியில் ஊக வணிகமான போரெக்ஸ் டிரேடிங் முதலீடுகள் மூலம் நல்ல லாபங்களை எதிர்பார்க்கலாம்.
மியூச்சுவல் ஃபண்ட் சம்பந்தப்பட்ட முதலீடுகள் மூலமாக தன வருவாய் அதிகரிக்கும். நன்கொடை மற்றும் தரும காரியங்களுக்குப், பணத்தை செலவு செய்வீர்கள். அரசு உத்தியோகத்தில் இருக்கும் அன்பர்கள் அங்கீகாரம் பெற சிறிது கடினமாக உழைக்க வேண்டியிருக்கும். மருத்துவத் தொழிலில் இருப்பவர்களுக்கு தன நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். மாணவர்கள் பதட்டமின்றிச் செயல்படுவார்கள். விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத் துறையில் இருக்கும் மாணவர்கள் பகுதி நேர வேலை பெறுவார்கள்.



## கடகம்

அதிக பணிகள் காரணமாக உங்களால் குடும்பத்திற்கென அதிக நேரத்தை ஒதுக்க இயலாது. வெளியூர் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதால் நீங்கள் சில காலம் உங்கள் குடும்பத்தை விட்டுப் பிரிய வேண்டியிருக்கும். தவறான உணவு முறை காரணமாக அஜீரணக் கோளாறுகள் ஏற்படும். மற்றபடி பெரிய அளவிலான உடல் பாதிப்புகள் ஏற்படாது. காதல் உறவு இனிமையாக இருக்கும். தம்பதியர் மனமொத்து வாழ்வார்கள். இந்த குருப் பெயர்ச்சியில் பணப்புழக்கம் சுமாராக இருக்கும். எழுத்துத் துறை மற்றும் கலைத் துறையில் இருப்பவர்கள் சிறந்த வகையில் வருமானம் ஈட்டுவார்கள். வீடு, வாகனம் மற்றும் நிலம் போன்றவற்றில் முதலீடு செய்வது நன்மை பயக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, சக பணியாளர்களுடன் சில கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ளுங்கள். இது, புதிய தொழிலுக்கான முதலீடுகளை மேற்கொள்ள உகந்த காலகட்டமாகும். பள்ளிக்கல்வி படிக்கும் மாணவர்கள் படிப்பில் வெற்றி காண்பார்கள். பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்கள் படிப்பிற்கென நேரம் ஒதுக்கிப் படித்தால் தான் சிறந்த வெற்றிகளைக் காண முடியும்.




## சிம்மம்

குடும்பத்தில் இளைய சகோதர சகோதரிகளிடம் நல்லுறவு காணப்படும். வீட்டில் திருமணம் மற்றும் வளைகாப்பு பேன்ற விருந்து விசேஷங்கள் நடக்கும் வாய்ப்புகள் உள்ளது. நண்பர்களுடனான உறவு பலப்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிறுநீரகம் சம்பந்தப்பட்ட உடல்நல பாதிப்பு ஏற்படலாம். போதுமான நீர் உட்கொண்டு, இந்த பாதிப்பிலிருந்து தப்பிக்கலாம். திருமணத்தில் தடை தாமதங்களை சந்தித்தவர்களுக்குத் திருமணம் கூடிவரும். திருமணமான தம்பதியர் மனமொத்து வாழ்வார்கள். இந்த குருபெயர்ச்சியில் உங்கள் பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். வீடு மராமத்துப் பணி போன்ற வகையில் செலவுகள் ஏற்படும். அரசுத் துறையில் பணிபுரிபவர்கள், தங்களின் உயர் அதிகாரிகளுடன் கருத்து வேறுபாடு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளது. வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நன்மை பயக்கும். பள்ளிக்கல்வி படிக்கும் மாணவர்கள் தங்களின் ஆசிரியர் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன் மூலம் படிப்பில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள்.



## கன்னி

உடன் பிறந்தவர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். குழந்தைகளுடனான உறவு வலுப்படும். குடும்பத்தில் அமைதி நிலவும்.
அதிக பணிகள் உங்கள் ஆரோக்கியத்தைப் பாதிக்கும். கழுத்து வலி மற்றும் முதுகு வலி போன்ற பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உங்கள் காதல் உறவில் சில போரட்டங்களை சந்திக்க வேண்டியது வரலாம். தம்பதிகள் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். இந்த குருபெயர்ச்சியில் உங்கள் பொருளாதாரம் நம்பிக்கை தரும் வகையில் இருக்கும். தன நிலையில் நல்ல முன்னேற்றம் காணப்படும். வெளிநாட்டு முதலீடுகள் மூலம் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் வளர்ச்சி காணப்படும். மேலதிகாரிகளுடன் இணைந்து பணியாற்ற வேண்டிய சூழ்நிலை இருக்கும் என்ற காரணத்தால் மனதில் பதட்ட நிலை இருக்கும்; என்றாலும் நீங்கள் தைரியமாகச் செயல்படுவீர்கள். இந்த குருபெயர்ச்சி, பள்ளியில் படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு, சிறப்பான பலன்களைத் தருவதாக அமைகிறது. படிப்பில் நல்ல முன்னேற்றமும், வெற்றியும் கிடைக்கும்.




## துலாம்

குடும்பத்தில் அன்பும், மகிழ்ச்சியும் நிறைந்து காணப்படும். குடும்பத்தார் அனைவரிடமும் சுமுகமான உறவு காணப்படும். மூத்த சகோதர சகோதரிகளிடம் நல்லுறவு காணப்படும். குழந்தைகளுடனான நல்லுறவு நீடிக்கும். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அதனைத் தக்க வைத்துக் கொள்ள நீங்கள் உடற் பயிற்சி மற்றும் தியானம் போன்றவற்றை மேற்கொள்ளுவதன் மூலம் உங்கள் உடல் மற்றும் மன நலனைப் பாதுகாக்க முடியும். காதலில் வெற்றி உண்டாகும்.
திருமணத்திற்காகக் காத்திருந்தவர்களுக்குத் திருமண முயற்சிகள் கைகூடும். இந்த குருப்பெயர்ச்சியில், வீட்டுத் தேவைக்கான செலவுகள் அதிகரிக்கும். இது, பங்கு மற்றும் பொருள் வர்த்தக நிறுவனங்களில் முதலீடு செய்ய ஏற்ற காலமாக உள்ளது. உத்தியோகத்தில் உள்ளவர்கள் அதிக பணிச் சுமை இருந்த போதிலும் சிறப்பாகப் பணியாற்றுவீர்கள். புதிய பணிகள் மற்றும் பொறுப்புக்கள் உங்களுக்குக் கூடுதலாக வழங்கப்படும். சுயதொழில் மேற்கொள்பவர்கள் பெரிய அளவிலான வாடிக்கையாளர்களைப் பெறுவீர்கள். இந்த குருபெயர்ச்சியில் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவியர்களுக்குப் படிப்பில் நல்ல முன்னேற்றம் காணப்படும். சிறப்பாகக் கல்வி பயின்று வெற்றி காண்பார்கள்.



## விருச்சிகம்

உங்கள் உடன் பிறந்தவர்களுடன் பண விஷயங்களில் சில பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. பண முதலீடு விஷயங்களில் குடும்பத்தாருடன் சில கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது. தாயாருக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். தாயாரின் உடல் நலனில் அக்கறை தேவை. உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நுரையீரல் மற்றும் இருதயம் சம்பந்தமான பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. திருமண உறவில் உள்ளவர்கள் தங்கள் வாழ்க்கைத் துணைக்காகப் பணம் செலவு செய்வீர்கள். தம்பதிகள் இடையே. தாம்பத்திய வாழ்வு நன்றாக இருக்கும். உங்கள் கடந்த கால முதலீடுகள் வளர்ச்சி காணும். கடன் சுமைகள் குறையும். நிலம் மற்றும் அசையா சொத்துக்களை வாங்குவது அதிக நன்மைகளைக் கொடுக்கும். இந்த குருபெயர்ச்சிக்குப் பிறகு நீங்கள் கடுமையாக உழைப்பீர்கள். உங்கள் கடின உழைப்பிற்கான அங்கீகாரமும் கிடைக்கும். அதன் மூலம் உங்கள் மேலதிகாரிகள் மற்றும் சக பணியாளர்களின் ஆதரவு மற்றும் ஒத்துழைப்பைப் பெறுவீர்கள். மாணவ மாணவியர்கள் அதிக கவனத்துடன், அதிக நேரம் படிக்க நேரும் என்பதால் தங்கள் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.



## தனுசு

சகோதர சகோதரிகளுடனான உறவுகள் பலப்படும். தாயின் உடல் நலனில் அக்கறை தேவை. குழந்தைகளுடனான உறவு சிறப்பாக இருக்கும். குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும். குடும்பத்தில் திருமணம், வளைகாப்பு போன்ற சுப நிகழ்வுகள் நடக்கும் வாய்ப்புகள் உள்ளது. உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும், என்றாலும் ஒற்றைத் தலைவலி, முதுகு வலி போன்ற சிறு சிறு உபாதைகள் வந்து நீங்கும். காதலர்களுக்கு இடையே பரஸ்பர நெருக்கம் அதிகரிக்கும். தம்பதிகளுக்கு இடையே நல்லுறவு காணப்படும். இணக்கம் அதிகரிக்கும். உத்தியோகம் செய்பவர்களுக்கு தன நிலையில் ஏற்றமும், தொழில் செய்பவர்களுக்கு தன லாபமும் கொடுக்கும் விதமாக இந்த குருபெயர்ச்சி அமைந்துள்ளது. வீட்டிற்குத் தேவையான வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் மரச் சாமான்களை வாங்குவதற்கு செலவுகள் செய்வீர்கள். அரசு உத்தியோகத்தில் பணி புரியும் உங்களுக்கு, மேலதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு கிடைக்கும். அவர்கள் உங்களை வழி நடத்துவார்கள். மாணவர்கள் கவனச் சிதறலுக்கு ஆளாவார்கள். மனதை ஒருநிலைப் படுத்தி கவனமுடன் படித்தால், கல்வியில் எளிதில் வெற்றி பேறலாம்.



## மகரம்

நண்பர்களிடம் நல்ல சுமுகமான உறவு நிலை இருக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். வீட்டில் உள்ள பெரியவர்களிடம் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நன்மை பயக்கும். குழந்தைகளின் உடல் நிலையில் கவனம் தேவை. உத்தியோகத்தில் பணிச்சுமை காரணமாக மனச்சோர்வு மற்றும் தூக்கமின்மை பிரச்சனைகள் ஏற்படலாம். தாயாருக்கு மூட்டு சம்பந்தப்பட்ட பிரச்சனை ஏற்படும். எனவே, மருத்துவ ஆலோசனை பெறுவது நன்மை பயக்கும்.

காதல் உறவில் உள்ளவர்கள் தன் துணை மூலமாக ஆதாயம் பெறுவார்கள். கணவன் மனைவிக்கு இடையே தாம்பத்திய உறவில் நெருக்கம் அதிகரிக்கும். உங்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். அதனால் தன வருவாயிலும் ஏற்றம் உண்டாகும். குடும்பத்தில் வசதிகள் மற்றும் ஆடம்பரம் பெருகும். தனியார் துறையில் உத்தியோகத்தில் உள்ளவர்கள் மிகவும் சாதகமான பலன்களை எதிர்பார்க்கலாம். கூட்டுத் தொழிலில் இருப்பவர்கள் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம். உயர் கல்வி படிக்கும் மாணவர்கள் ஆசிரியர் மற்றும் பெற்றோரின் ஆதரவைப் பெறுவார்கள். சிறப்பாகக் கல்வி பயின்று வெற்றி காண்பார்கள்.



## கும்பம்

குடும்பத்தில் அன்பும் மகிழ்ச்சியும் நிலவும். குடும்பத்தில் உள்ள அனைவரிடமும் சுமுகமான உறவு காணப்படும். புத்திர பாக்கியம் தாமதப்பட்ட தம்பதிகளுக்குப் புத்திர பாக்கியம் ஏற்படும். உங்கள் ஆரோக்கியத்தில் சிறிது கவனம் தேவை. வயிற்றுப்புண் மற்றும் அஜீரணக் கோளாறு போன்ற பாதிப்புகள் ஏற்படலாம். குறித்த நேரத்தில் சாத்வீக உணவை எடுத்துக் கொள்வதன் மூலம், உங்கள் ஆரோக்கியத்தை பாதுகாத்துக் கொள்ள இயலும். காதல் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். திருமணம் தடை மற்றும் தாமதப் பட்டவர்களுக்குத் திருமணம் கைகூடும். தம்பதிகள் வெளியூர்களுக்கு இன்பச்சுற்றுலா சென்று வருவதால் மகிழ்ச்சி ஏற்படும். நிதிநிலையைப் பொறுத்தவரை இந்த குருபெயர்ச்சி உங்களுக்கு அதிர்ஷ்டகரமானதாக இருக்கும். வீட்டுத் தேவைக்கான செலவுகள் அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களை விற்பதன் மூலம் தன நிலையில் ஏற்றமும் நல்ல லாபமும் கிடைக்கும். அரசு உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலையில் பொறுப்புகள் அதிகரிக்கும். தனியார் துறைகளில் பணிபுரிபவர்களின் வேலை திறன், அதிகாரிகளால் பாராட்டப்படும். பள்ளிக்கல்வி பயிலும் மாணவர்கள் பல புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வார்கள். உயர்கல்வி படிக்கும் மாணவர்கள் சிறந்த முறையில் தேர்வுகளை எழுதி நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள்.



# மீனம்

குடும்ப உறவு மற்றும் அன்பைப் பெற நீங்கள் சுயநலமின்றி செயல்பட வேண்டும். வயதில் மூத்த குடும்ப உறுப்பினர்களிடம் நீங்கள் பேச்சில் கவனமாக இருக்க வேண்டும். வாக்குவாதத்தைத் தவிர்க்க வேண்டும். குழந்தைகளின் நலனில் அக்கறை தேவை. இந்த குருப்பெயர்ச்சியில் ஆரோக்கியக் குறைபாடுகள் வரலாம். கண் அல்லது தூக்கக் குறைபாடுகள் வரலாம். உங்கள் ஆரோக்கியம் குறித்த செலவுகள் எழும் என்பதால் அதற்கு சிறிது பணத்தை நீங்கள் ஒதுக்கி வைத்துக் கொள்ள வேண்டும். காதலில் கடுமையான முயற்சிக்குப் பிறகு வெற்றி கிடைக்கும். வாழ்க்கைத் துணையிடம் கருத்து வேறுபாடு ஏற்படும் வாய்ப்புகள் உள்ளது. எனவே, வாக்கில் கவனமாக இருக்க வேண்டும். வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நலம். உங்கள் பொருளாதார நிலை மனதிற்கு திருப்தி அளிக்கும் வகையில் இருக்காது. என்றாலும் கடினமாக உழைப்பதன் மூலம் உங்கள் பொருளாதார நிலையில் ஏற்றம் காணலாம். உத்தியோகத்தைப் பொறுத்தவரை, முன்னேற்றத்தில் மந்த நிலை இருக்கும். கூட்டுத் தொழில் மூலம் நல்ல லாபங்களை எதிர்பார்க்கலாம். பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் படிப்பில் கவனம் தவற வாய்ப்பு உள்ளது என்பதால் கவனமாகப் படிக்க வேண்டும்.




**உங்கள் இல்லத்தில் வைதீக/ஆகம முறைப்படி**

**யாகங்கள் மற்றும்**

**சத்ய நாராயண பூஜை போன்ற அனைத்து**

**பூஜைகளும் செய்து தர அணுகவும்**

**www.priestservices.com**

**போன்: 88702 88701**